Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-11 | 27-07-2005 | புதன்கிழமை | ஓசை-159



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-12149)

# தமிழரை நிம்மதியாக வாழ அனுமதித்தாலே

# சிங்கள தேசம் நிம்மதியாக வாழ முடியும்!

## தமிழீழச் சட்டவாக்கச் செயலக திறப்பு விழா நிகழ்வில் சு.ப.தமிழ்ச்செல்வன்

***சிங்கள தேசம் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து எமது மக்கள் மீது திணித்திருக்கின்ற இராணுவ ஆக்கிரமிப்பு நெருக்குவாரங்கள் அனைத்தையும் நிறுத்தி தமிழர் தேசத்தையும், தமிழ் மக்களையும் நிம்மதியாக வாழ அனுமதித்தால் மட்டுமே, சிங்களதேசமும் ஒரு நிம்மதியான வாழ்வைப் பெற முடியும். அதை விடுத்து தமிழ் மக்கள் மீது வன்முறையை, ஆக்கிரமிப்பை திணித்து வாழ்வைச் சிதைக்கமுற்படுவார்களேயானால் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு மீண்டெழுந்து ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இவ்வாறு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று நடைபெற்ற தமிழீழச்சட்டவாக்கச் செயலகத் திறப்புவிழா நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.***

அவர் தமது உரையில் மேலும் தெரிவிக்கையில்;

எங்களுடைய தமிழீழத் தேசத்தின் கட்டுமானத் தோற்றங்களிலே ஒரு முக்கிய நிகழ்வாக இன்று எங்களுடைய சட்டவாக்க செயலகம் திறக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே எமது தமிழீழச் சட்டவாக்கப் பிரிவு செயற்பட்டுக்கொண்டிருந்தாலும், அதற்கான ஒரு செயலகத்தை இன்று நாங்கள் ஆரம்பித்து அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிக்கொண்டு போவதற்கான ஒரு படிநிலையாக இன்றைய நாளை நாங்கள் பார்க்கின்றோம். உண்மையிலேயே எங்களுடைய தமிழீழ தேசத்தினது ஒவ்வொரு நிகழ்வுகளும் இன்று எல்லோராலுமே ஒரு வியப்பாக பார்க்கப்படுகின்ற சூழ்நிலைதான் இருந்துவருகின்றன. ஏனெனில் பல்வேறுபட்ட விடுதலைப் போராட்டங்கள் உலக அளவிலே நடந்திருகின்றன. பல வெற்றிகளை ஈட்டியிருக்கின்றன. ஆனால் இந்தத் தமிழீழ விடுதலைப்போராட்டம் முழுமையான, நிறைவான வெற்றியை ஈட்டாத நில்லையிலும் தமிழீழதேசத்

(12ஆம்பக்கம் பார்க்க)



## வவுனியாவில் இரு தமிழ் இளைஞர் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை

வவுனியாவின் வடமேற்கே நான்கு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மணிப்புரம் பிரதேசத்தில் இரு இளைஞர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

சடலங்களாக மீட்கப்பட்ட இரண்டு இளைஞர்களும், கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருந்து வாடகைக்கு அமர்த்தி செல்லப்பட்ட வாகனத்தின் ஓட்டுநரும், வாகன உரிமையாளரின் மருமகனும் எனத் தெரியவந்துள்ளது.

ஒருவர் யாழ்நகரைச் சேர்ந்த குமாரசாமி பத்மகரன் (வயது-23) மற்றவர் சரசாலை தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கோகிலன் (வயது-26) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(12ஆம்பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பு சபையிலும் தே.ஆணைக்குழுவிலுமுள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வற்புறுத்து

அரசியலமைப்பு சபையினதும் தேர்தல்ஆணைக்குழுவினதும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு இலங்கை "ரான்ஸ்பேரன்சி இன்டர் நெசனல் " வேண்டுகோள் விடுத்துள்ளது.தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை முன்னைய அரசியலமைப்பு பேரவை ஏகமனதாக பரிந்துரைத்த போதும் சனாதிபதி கடந்த 18 மாதங்களாக அதற்கான நியமனங்களை மேற்கொள்ள வில்லை. இதன் காரணமாக நாட்டின் தேர்தல் ஆணையாளர் ஓய்வுப்பெறும் வயதிலும் தொடர்ந்து பணிபுரிவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.இந்த நிலையில் அரசியல் அமைப்பு சபையையும் தேர்தல் ஆணைக்குழுவையும் ஏற்படுத்த தவறியமை சட்டவாட்சியை பாதிக்கக் கூடிய எதிர்விளைவுகளை தோற்றுவித்துள்ளதாக "ரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனலின்" நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே சி வெலியமுன குற்றம் சுமத்தியுள்ளார்.

(12ஆம்பக்கம் பார்க்க)

## களுத்துறை பாந்தி தோட்டத்தில் நேற்று மீண்டும் மோதல்

(கொழும்பு)

களுத்துறை பாந்தி தோட்டத்தில் நேற்று மீண்டும் இனங்களுக் கிடையிலான மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்த பாந்தி தோட்ட தொழிலாளியான சுந்தரம் என்பவர் நாகொட வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (12ஆம்பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மாகாண முப்படையினருடன் சனாதிபதி சந்திரிகா ஆலோசனை

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பு முற்பகல் 2.30 மணிக்கு கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு கிழக்கில் காணப்படும் தற்போதைய பாதுகாப்பு நிலவரங்கள், அரசின் நிலையற்ற தன்மை மற்றும் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் குறித்து முப்படையினருடனும், பொலிஸ்துறையினருடனும் சந்திரிகா குமாரதுங்க விரிவாக கலந்துரையா

(12ஆம்பக்கம் பார்க்க)

## சனாதிபதித் தேர்தல் தொடர்பான சு.க குழுகூடியது மகிந்தவுக்கு சனாதிபதி வேட்பாளராகும் வாய்ப்பு

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்பாடுகள் பற்றித்திட்டமிட சனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்ட குழு நேற்றிரவு கூடியபோது மகிந்தராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யும் வாய்ப்பு அதிகமாக இருந்ததாகவும் எனினும் இதுகுறித்த முடிவு உடனடியாக வெளியிடப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு 10 மணிக்கு சனாதிபதி சந்திரிகா தலைமையில் ஆரம்பமான இக்குழுக்கூட்டம் நள்ளிரவு தாண்டியும் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இதன்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவிலும்,பிராந்திய ரீதியான குழுக்களிலும் மகிந்தராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக்குவதற்கே அதிக ஆதரவு காணப்பட்டதாகவும் இதனையடுத்து அவரை சனாதிபதி வேட்பாளராக்குவதற்கான வாய்ப்பு அதிகமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இவ்விடயம் உடனடியாக அறிவிக்கப்படமாட்டாது எனவும் தெரி

(12ஆம்பக்கம் பார்க்க)

## சனாதிபதித்தேர்தல் குறித்து மக்களுக்கு ஐ.தே.கட்சி அறிவூட்டல்

சனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றி ஐக்கிய தேசியக் கட்சி அதன் அனைத்துக்கிளைக காரியாலயங்களுக்கூடாக உறுப்பினர்களுக்கு அறிவூட்டவுள்ளது.

இம்மாதம் 29, 30, 31 ஆம் திகதிகளில் இந்த அறிவூட்டல் நடவடிக்கைகள் இடம்பெறும். அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் வகையில் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்த ஆண்டிற்குள் சனாதிபதித் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி அடுத்த மாதம் முழுவதும் நாடளாவிய ரீதியில் பல செயற்திட்டங்களை முன்னெடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

சனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடத்துமாறு வலியுறுத்தி மக்களின் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கைகளை நாடு பூராவும் பல கட்டங்களில் மேற்கொள்வதற்கும் ஐக்கிய

(12ஆம்பக்கம் பார்க்க)

## வவுனியா - வைரவப் புளியங்குளத்தில் இன்று மாபெரும் எழுச்சி மாநாடு

(வவுனியா)

வவுனியாவில் தமிழ் மக்களின் மாபெரும் எழுச்சி மாநாடு இன்று நடைபெறுகிறது.

தமிழர் தாயகப் பிரதேசங்கள் அனைத்திலும் இருந்து செல்லும் பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். இந்த மாநாட்டின் முடிவில் 14 தீர்மானங்களை உள்ளடக்கிய பிரகடனம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்தப் பிரகடனத்தில் தமிழருடைய இனப்பிரச்சினை அதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்த தீர்மானங்கள் உள்ளடக்கப்படும்.

இந்த மாநாட்டுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

## வரிவிளம்பரம்

**10-நிமிடத்தில் படங்கள்!!!**
பாஸ், சகல அடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். டிஜிட்டல் அல்பம் தயாரிப்பவர்கள் யாழ்ஒளி **K.S.R. PHOTOS** இல 05 கனகபுரம் தெரு கிளிநொச்சி. (6384)

## பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் ஊரகவளச்சிப் பணியாளர்களின் ஒழுங்கு படுத்தலில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் பாடசாலைசெல்லும் மாணவர் களுக்கு பாடசாலை உபகரணங் களை வழங்கியுள்ளது. (12)




## காணவில்லை

உடையார்கட்டில் வசிக்கும் ஜெயசிங்கம் டிசாந்தன் என்பவரை 07-07-2005இல் இருந்து காணவில்லை. அவர் உடையார் கட்டில் இருந்து வட்டக்கச்சி பாடசாலைக்காக வந்தவர். (வயது-15) இவரை எங்குகண்டாலும் வட்டக்கச்சி அரசியல்துறை பணிமனையில் அல்லது காவல்துறை பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றனர்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6393)

## Job Advertisement

# Save the Children
### in Sri Lanka

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organization working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

A vacancy exists for the following position.

**Logistics Assistant**

The principle aim of this post is to work with the District Manager, to support the day-to-day running of SCiSL programmes. The Logistics Assistant is expected to have the capacity to suggest and implement appropriate logistic policies and practices and effectively support logistic staff.

**Only Sri Lankan citizens are eligible to apply.**

**Base Station : Kilinochchi**

**Qualifications and experience:**

**Essential**

1. Sound educational background.
2. About 2 years proven experience in similar duty.
3. Ability to work independently using own initiative within the scope of responsibilities.
4. Ability to work as Storekeeper, Transport manager or procurement officer.
5. Good interpersonal and communication skills
6. Good report writing skills.
7. Fluency in written and spoken English with fluency in one or more of the local languages.
8. Teamwork effective time management and skills.

**Desirable**

1. Knowledge of a third language.
2. A clean driving license (Motorcycle or any other vehicle license)
3. Sound knowledge of electricity wiring, installation and Maintenance of generators (but not important)

**A highly competitive remuneration package awaits the selected candidates.**

The above positions would be initially for a period of one year.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Applications should be sent with the names of two non related referees on or before **7 August 2005** to:

**Save the Children in Sri Lanka**
**142, Kandy Road , Kilinochchi Regional Office**

**Only applicants selected for the interview will be contacted.**
**No telephone inquiries please**

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster** and **Social Harmony** and **Peace**. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

(சி-12453)

## பணிநிலை வேண்டுகை

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து (ஆண்கள்) கோரப்படுகின்றன.

01. காசாளர்
02. சிட்டை எழுதுனர்
03. கணக்குப் பதிவாளர் (இருபாலாரும்)
04. களஞ்சியக் காப்பாளர்
05. சமையல் உதவியாளர்
06. பரிமாறுனர்
07. காவலாளி

**சம்பளம்:-**

**நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

விண்ணப்பங்கள் 28.07.2005 தொடக்கம் 05.08.2005 வரை ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் உரிய சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

**தொடர்புகளுக்கு தொ. பேசி இல. 021-2285944**

மேலாளர்
1-9 தங்ககம்,
167- யாழ்சாலை,,
கிளிநொச்சி.

(சி-12455)




(சி-12381)

# வடகொரியாவைத் தாக்கும் எண்ணம் கிடையாது அதனை ஒரு இறமையுள்ள நாடாகவே கருதுகிறோம்

## அமெரிக்கப் பேச்சாளர் தெரிவிப்பு

(பீஜிங்)

**வடகொரியாவை இறைமை யுள்ள நாடாகக் கருதுவதாகவும் அதனைத் தாக்கும் எண்ணம் கிடையாது எனவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.**

நேற்று பீஜிங் நகரில் ஆரம்பமான வடகொரியாவின் அணுவாயுதத் திட்டங்கள் பற்றிய ஆறு தரப்பு பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்தில் அமெரிக்காவின் பிரதான பேச்சாளர் கிஸ் ரோபர்கில் இவ்வாறு கூறினார்.

வடகொரியாவின் சந்தேகத்திற்கிடமான அணுவாயுதத் திட்டங்களால் எழுந்துள்ள சர்ச்சைகளைத் தீர்க்கும் நோக்கில் மீண்டும் ஆறு நாடுகள் கூடியுள்ளன. வடகொரியா, அமெரிக்கா ஆகியவற்றுடன் ரஷ்யா, சீனா, யப்பான், தென்கொரியா ஆகியவற்றின் பேச்சாளர்களும் கலந்து கொள்கிறார்கள். இவற்றின் முதல் மூன்று சுற்றுப்பேச்சுக்களில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.



காசா முனைப்பகுதியில் பயிற்சியிலீடுபடும் இஸ்ரேலிய இராணுவத்தினர்.

## பிரேசில் இளைஞரின் கொலைக்கு பிரிட்டன் பிரதமர் வருத்தம் தெரிவிப்பு

(லண்டன்)

லண்டனில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிசார் தீவிரவாதி என்று நினைத்து பிரேசில் இளைஞரைத் தவறாக சுட்டுக்கொன்றனர். இதற்கு பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் வருத்தம் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில்; அப்பாவி பிரேசில் இளைஞர் கொல்லப்பட்டதற்கு நாங்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் குடும்பத்தினரின் உணர்வுகளை நாங்கள் உணர்கிறோம்.



அதேநேரம் பொலிசாரின் பணி சிககலானது. அவர்களுக்கு ஆதரவு அளிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

## எகிப்து தொடர்குண்டு வெடிப்பு 6 பாகிஸ்தானியருக்கு வலை விரிப்பு

சுற்றுலாத் தலத்தில் தொடர்கார்க்குண்டு வெடிப்பில் 100 பேர் பலியான சம்பவத்தில் பாகிஸ்தானியர் ஆறு பேரை எகிப்து பொலிசார் தேடிவருகின்றனர்.

எகிப்தின் செங்கடல் பகுதியில் ஷர்ம் எல்-ஷேக் சுற்றுலாத்தலத்தில் கடந்த சனிக்கிழமை தொடர்கார்குண்டுகள் வெடித்தன. இதில், எகிப்தியர் உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த 100 பேர் பலியாயினர். நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். எகிப்தின் சுற்றுலாத் துறையைச் சீர்குலைக்கும் இந்த முயற்சிக்கு, அதிபர் ஹோஸ்னி முபாரக் கடும் கண்டனம் தெரிவித்தார். தீவிரவாதிகளின் இந்த மிரட்டலுக்கு அஞ்சப் போவதில்லை என்றும் எச்சரித்தார்.

விசாரணையின் தீவிரம் கருதி பெயர் குறிப்பிட விரும்பாத எகிப்து நாட்டின் விசாரணை அதிகாரிகள் இதுகுறித்து கூறியதாவது;

இந்தத் தொடர் குண்டுவெடிப்பு தொடர்பாக பாகிஸ்தானியர் ஆறு பேர் தேடப்படுகின்றனர். ஷர்ம எல்ஷேக் நகரில் ஒரு விடுதியில் தங்கியிருந்த இவர்கள் குண்டு வெடிப்பு நடந்த பின் தலைமறைவாகி விட்டனர். கடவுச்சீட்டில் இருந்த அவர்களது போட்டோ நகல்கள் எல்லாச் சோதனைச் சாவடிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எந்த விடுதியில் அவர்கள் தங்கி இருந்தனர் என்ற விபரத்தை இப்போது வெளியிட இயலாது.

நாமா வளைகுடாவில் கஜாலா கார்டன் விடுதியில் அவர்கள் தங்கவில்லை. அங்கு நடந்த குண்டு வெடிப்பில் பாகிஸ்தானை சேர்ந்த ஒருவரும் பலியாகியுள்ளார். அதை உறுதிப்படுத்த மரபணு சோதனை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது இவ்வாறு · எகிப்தின் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொலைக்குற்றஞ் சாட்டப்பட்ட இந்தியருக்கு மரண தண்டனை

(ரியாத்)

கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட இந்தியருக்கு சவுதி அரேபியாவில் நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து உள்துறை அமைச்சகம் தெரிவிக்கையில்; உறங்கிக்கொண்டிருந்த இந்தியர் ஒருவரை கத்தியால் குத்திக்கொலை செய்த மற்றொரு இந்தியருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. சவுதி அரேபியாவில் முஸ்லிம் ஷரியத் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படுகிறது. போதை மருந்து கடததல், கொலை, பாலியல்வல்லுறவு போன்ற குற்றங்களுக்கு மக்கள் முன்னிலையில் வாளால் தலையை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்படும். இந்த ஆண்டு இது வரைக்கும் 50 பேருக்கு இது மாதிரி மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு 53 பேரும் கடந்த ஆண்டு 35 பேரும் மரணதண்டனை பெற்றுள்ளனர்.



அமெரிக்கப் படையினரை வாபஸ் பெறுமாறு கோரி காபூலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தும் ஆப்கானிஸ்தானியர்கள்.

## லண்டன் குண்டு வெடிப்பு தொடர்பாக மேலும் ஒருவர் சந்தேகத்தில் கைது

(லண்டன்)

லண்டனில் கடந்த 21 ஆம் திகதி நடந்த குண்டுவெடிப்புத் தொடர்பாக மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குண்டு வெடிப்பு தொடர்பாக லண்டனில் ஏற்கனவே இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்கும் தேடுதல் வேட்டையில் நேற்று முன்தினம் மேலும் ஒருவர் கைதானார். தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டதாக லண்டன் பொலிசார் கூறியுள்ளனர்.

லண்டன் தென்பகுதியில் ஸ்டாக்வெல் அருகிலுள்ள இடத்தில் கைது செய்யப்பட்டவரைப் பற்றிய தகவல்களைப் பொலிசார் வெளியிடவில்லை.

## 'வெள்ளிக்கிழமை வேலை இல்லை' தாய்லாந்தில் தீவிரவாதிகள் மிரட்டல்

(பாங்கொக்)

'முஸ்லிம்கள் வழிபாட்டு தினமான வெள்ளிக்கிழமை எந்த வேலையும் செய்யக் கூடாது. வர்த்தகத்தில் ஈடுபடக்கூடாது' என்று தாய்லாந்து மக்களுக்கு முஸ்லிம் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

தாய்லாந்தில் ரப்பர் உற்பத்தி தொழில் பிரதானமாக இருந்து வருகிறது. இந்நாட்டில் நரதிவாட்டில் வசிக்கும் எட்டு இலட்சம் பேரில் 80 சதவீத மக்கள் ரப்பர் உற்பத்தியை நம்பி வாழ்கின்றனர். தாய்லாந்து நாட்டின் தெற்கு மாகாணமான நரதிவாட்டில் முஸ்லிம் மக்கள் கணிசமாக வசிக்கின்றனர். இங்கு முஸ்லிம் தீவிரவாதிகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த 19 மாதங்களில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 800 இற்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். தீவிரவாதிகள் நரதிவாட் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். அதில் 'முஸ்லிம்களின் வழிபாட்டு தினமான வெள்ளிக்கிழமை யாரும் வேலைக்கு செல்லக்கூடாது. எந்த வர்த்தகத்திலும் ஈடுபடக்கூடாது' என்று மிரட்டல் விடுத்தனர். துண்டுப்பிரசுரங்களில் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்ததை அடுத்து பொதுமக்கள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர். பெரும்பாலானோர் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு பயந்து வேலைக்கு செல்ல மறுத்து வருகின்றனர். இதனால் நரதிவாட் பகுதியின் ரப்பர் உற்பத்தி பெரிதும் பாதிப்படைந்து வருகிறது. ஆண்டுதோறும் நரதிவாட் பகுதியில் இருந்து ஆறு இலட்சம் டன் ரப்பர் உற்பத்தி செய்யப்படுகிறது. இது தாய்லாந்து நாட்டின் மொத்த ரப்பர் உற்பத்தியில் 20 சதவீதம். உலக அளவிலான ரப்பர் உற்பத்தியில் தாய்லாந்து முதலிடம் வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக தாய்லாந்தின் ரப்பர் உற்பத்தி நலிந்து விடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

இது குறித்து வர்த்தகர்கள் கூறுகையில்; "தீவிரவாதிகளின் மிரட்டலை மீறி ரப்பர் வர்த்தகத்தில் ஈடுபட முடியாது." என்று தெரிவித்தனர்.



லண்டன் குண்டுவெடிப்பையடுத்து நாட்டின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வர லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதமர் ரொனிபிளேயர்.

## அமெரிக்காவில் வெடிகுண்டுப் பீதி ரயில் நிலையம் மூடப்பட்டது

அமெரிக்காவில் நியூயோர்க் நகர ரயில் நிலையத்தில் வெடிகுண்டுப் பீதி எழுந்ததைத் தொடர்ந்து ரயில் நிலையம் மூடப்பட்டது.

லண்டன் நகரில் மூன்று ரயில் நிலையங்களிலும் ஒரு பேருந்திலும் தொடர்குண்டு வெடிப்பு நடந்ததைத் தொடர்ந்து அமெரிக்காவிலும், வெடிகுண்டுப் பீதி நிலவி வருகிறது.

நியூயோர்க் நகரிலுள்ள பென்சில்வேனியா ரயில் நிலையத்தில் பயணி ஒருவர் ஒரு பையைத் தூக்கி எறிந்தார். இதைப்பார்த்து வெடி குண்டு என நினைத்த சக பயணிகள் அங்கிருந்து வேகமாக வெளியேறினர்.

இதனால் ரயில் பயணிகளிடம் பீதி ஏற்பட்டது. பொலிசார் ரயில் நிலையத்தில் இருந்த பயணிகள் அனைவரையும் வெளியேற்றினர்.

ரயில் நிலையமும் மூடப்பட்டது. அதன் பின் சோதனை போடப்பட்டபோது அது வெறும் பை என்பது தெரியவந்தது.

## ஆப்கானில் குண்டு வெடிப்பு ஒருவர் பலி; ஆறுபேர் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் குனார் மாநிலத்தில் அமெரிக்க இராணுவத்தினர் சென்ற வாகனம் மீது வீதி ஓரத்தில் கிடந்த குண்டு வெடித்ததில் ஆறு இராணுவத்தினர் காயமடைந்தனர். அதே நேரத்தில் தலிபான் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்க இராணுவத்தினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. இதில் ஒரு அமெரிக்கர் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார்.



போர்த்துக்கல் நாட்டில் சியா நகரம் அருகே உள்ள கேபிகா கிராமத்தை காட்டுத்தீ சூழ்ந்துள்ளது. இக்கிராமத்தில் உள்ளவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு விட்டனர். லிஸ்பன் அருகே போம்பால் என்ற இடத்தில் தீ வேகமாகப் பரவுவதைக் கண்டு ஓட்டம் பிடிக்கிறார் தீயணைப்பு வீரர் ஒருவர்.

## பீகார் மருத்துவர்களை விடுவிக்க மனித உரிமை அமைப்பு வேண்டுகோள்

நேபாளத்தைச்சேர்ந்த மாவோ கிளர்ச்சியாளர்கள் என்று சந்தேகிக்கப்படுவோருக்கு சிகிச்சையளித்ததன் காரணமாக கைது செய்யப்பட்டுள்ள பீகார் மருத்துவர்கள் உடனே விடுவிக்கப்படவேண்டுமென்று சிவில் மற்றும் மனிதஉரிமை அமைப்புக்கள் கேட்டுள்ளன. தவறிழைத்த பொலிஸ் அதிகாரிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் அந்த அமைப்புக்கள் கூறியுள்ளன.

தங்களிடம் வரும் அனைத்து நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்று மருத்துவர்கள் எடுத்துக்கொள்ளும் உறுதி மொழியில் கூறப்பட்டிருப்பதை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நோயாளிகளுக்கு மருத்துவம் அளிப்பது மருத்துவர்களின் கடமையென்றும் அதே நேரத்தில் மாவோ கிளர்ச்சியாளர்கள் மருத்துவம் பெற வருவதால் மாநிலத்தில் மருத்துவமனைகளை அரசு கண்காணித்து வருவதாக பீகார் மாநிலஆளுநர் பூட்டாசிங் கூறியிருப்பது இரட்டைவேடபேச்சுஎன்றும் பி.யூ.சி.எல்.மற்றும் பி.யூ.டி.ஆர் உள்ளிட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

## சீனாவில் நிலநடுக்கம்

(பீஜிங்)

சீனாவில் வடகிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. டாகுயிங் நகருக்கு வடக்கே 33 கி.மீ தூரத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. ரிச்டர் அளவில் 5.1 ஆக நிலநடுக்கம் பதிவானது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் இல்லை.

# களமுனைப் பகுதிக்குச் சென்ற மக்கள் போராளிகளைச் சந்தித்து கலந்துரையாடல்



சிலோன் தியேட்டர் களமுனைக்குச் சென்ற மக்கள் அங்கு நிலை கொண்டுள்ள கள முனைப்போராளிகளைச் சந்தித்து உரையாடி அவர்களுக்கு ஊக்கம் கொடுத்ததோடு உணவுப்பண்டங்களையும் வழங்கியுள்ளனர். மாங்குளம் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். (05)

# உலக வைத்தியக் குழுவினரின் மருத்துவ முகாம் நிறைவு

(செட்டிகுளம்)

வவுனியாவில் உலக வைத்தியக் குழுவினரால் வழங்கப்பட்ட சிகிச்சை நேற்று முன்தினம் முடிவடைந்தது.இந்த சிகிச்சை முகாமில் 11,113 பேர் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

இந்த மருத்துவக் குழுவினரால் கொண்டு வரப்பட்டு எஞ்சிய 35 இலட்சத்துக்கு அதிகம் பெறுமதியான மருந்துப் பொருட்கள் வவுனியா பொதுமருத்துவமனையின் பாவனைக்கு என்று வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஷல்சிடம் உலக மருத்துவக் குழுவால் அன்றை தினம் மாலை வழங்கப்பட்டது.

இந்த மருத்துவ முகாமில் 12 நாடுகளைச்சேர்ந்த 60 வைத்தியர்கள் சிகிச்சை வழங்கியிருந்தனர்.

இந்த மருத்துவ முகாமை நாற்சதுர சுவிசேசசபை ஏற்பாடு செய்திருந்தது. (21)

# உ.அரச அதிபர் பணிமனையை தேடி அலையும் பொதுமக்கள்!

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பணிமனையினை மக்கள் தேடிஅலையும் அவலத்தை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பணிமனை முல்லைத்தீவு நகரப்பகுதியில் நிரந்தரமாக இயங்கிவந்தபோது கடந்தாண்டு இறுதியில் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலையில் சிக்குண்டு அழிந்து போக மீண்டும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை தற்காலிகமாக முள்ளியவளை கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் இயங்கி வருகின்றது.

மேற்படி திணைக்களத்திற்கான விளம்பரப்பலகை பிரதான வீதிச் சந்தியில் உள்ள போதிலும், உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான பெயர்ப்பலகை இல்லாமையால் விடயம் அறியாத சில மக்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினை தேடிஅலைந்து அல்லற்பட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பணிமனையினை நாடி சுமார் 15 மைல்களுக்கு அப்பால் மாத்தளன், முள்ளிவாய்க்கால், பொக்கணை போன்ற இடங்களில் இருந்தும் சுமார் பத்து மைல்களுக்கு அப்பால் செம்மலை நாயாறு, குமுளமுனை, ஆறுமுகத்தான்குளம் போன்ற பகுதிகளில் இருந்தும் செல்லும் பலர் இடங்கள் தெரியாதநிலையிலும் பணிமனையினை தேடி அலைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பணிமனைக்கான பெயர்ப்பலகையினை இயங்கும் கட்டடத் தொகுதியிலும் மாலதி நினைவுத் தூபி சந்தியிலும் நாட்டினால். மக்கள் இலகுவாக இனங்கண்டு அலைச்சல் இன்றி தமது தேவைகளை நிறைவுசெய்ய பணிமனையுடன் தொடர்பு கொள்ள வழிவகுக்கும். (ஆ)

# தமிழர் துயர் போக்க சிறிலங்கா அரசால் இயலாது பிராந்தியக் கட்டமைப்பின் உருவாக்கமே அவசியம்!

## —இரா. சம்பந்தன் வலியுறுத்து

*"யுத்தம் மற்றும் கடற்கோள் அழிவுகளைச் சந்தித்த வடக்கு–கிழக்கு தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கியுள்ள துன்ப, துயரங்களுக்கு எல்லையே கிடையாது. இவற்றுக்குத் தீர்வுகாண்பதற்கு நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அதிகாரங்களைக் கொண்ட பிராந்தியக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு இனியும் தாமதம் காட்டக்கூடாது". இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.*

"கடற்கோள் ஏற்பட்டு ஏழு மாதங்கள் ஆகின்றன. கடற்கோள் அழிவுகளில் 70 சதவீதமானவை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டன. வட- மாகாணத்தில் சுமார் 4762 பேரும் கிழக்கு மாகாணத்தில் சுமார் 6153 பேருமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மொத்த மாக சுமார் 10 915 தமிழ் மக்கள் கடற்கோளினால் உயிரிழந்துள்ளனர்" என்று சம்பந்தன் தெரிவித்தார்.

"யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கானோர் அகதிகளாக இடம்பெயர்ந்தனர். யுத்த நிறுத்தம் வந்து சுமார் நான்கு ஆண்டுகளாகியும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாது முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தொடர்ந்தும் தங்கி வருகின்றனர்."

மத்தியிலிருந்து எடுக்கப்படும் முடிவுகளால் யுத்தம், கடற்கோள் ஆகியவற்றினால் அழிந்துபோன வடக்கு-கிழக்கு மாகாணத்தை புனர்நிர்மாணம் செய்யவோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவோ முடியாது. கடற் கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச சமூகம் தயாராக இருக்கிறது. ஆனால் அவ்வுதவிகளை சரியான முறையில் பகிர்ந்தளிக்கக்கூடிய கட்டமைப்பு கிடையாது. இதனால், பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பிராந்தியக் கட்டமைப்பு உரிய அதிகாரங்களுடன் காலதாமதமின்றி அமைக்கப்பட வேண்டும் என்றும் சம்பந்தன் வலியுறுத்தினார்.

ஏழு மாதங்கள் கழிந்த பின்னரும் வடக்கு-கிழக்கில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வில் இயல்பு நிலை திரும்புவது பாதிக்கப்பட்டுள்ளது. கடற்கோளின்போது வடக்கு-கிழக்கில் உயிரிழந்த மற்றும் காணாமற்போன தமிழ் மக்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக பார்க்குமிடத்து திருகோணமலை - 240, மட்டக்களப்பு - 3070, அம்பாறை - 2843, யாழ்ப்பாணம் - 1339, முல்லைத்தீவு 3390, கிளிநொச்சி - 33.

கடற்கோளினால் முஸ்லிம் மக்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளுக்குப் பலியானவர்களில் அதிக எண்ணிக்கையானோர் முஸ்லிம் மக்களே. கடற்கோளினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கும் உரிய உதவிகள் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். (25)

# மாதாந்த வீரமுரசு நிகழ்வில் மாவீரர்பெற்றோர் கௌரவிப்பு

(மல்லாவி)

நட்டாங்கண்டல் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு கலையரங்கமும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை இரவு ஏழு மணிக்கு நட்டாங்கண்டல் விளையாட்டு மைதானத்தில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி. சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி, பாண்டியன்குளம் கோட்டக் கல்வி அதிகாரி சு. தியாகராசா ஆகியோர் ஏற்றிவைக்க பதினைந்து மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கு மாவீரர் பெற்றோர்கள் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலைகள் அணிவித்தனர். தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானது.

முதன்மையாக வரவேற்பு நடனத்தை பாண்டியன்குளம் மகாவித்தியாலய மாணவி வி. நிரோஜினா நிகழ்த்தினார்.

கருத்துரையை, முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் ஆ. தவிநாயகம் நிகழ்த்த சிறப்புரையை முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி நிகழ்த்தினார்.

கலை நிகழ்வுகளில் பாண்டியன்குளம் மகாவித்தியாலய மாணவர்களின் ஒற்றுமையே பலம் எனும் நாடகத்துடன் இசையும் அசைவும், கவிதை, நடனம், பேச்சு, பாடல்கள் இடம்பெற்றன. நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், போராளிகள் எனப் பலர்கலந்து கொண்டனர். (24)

# இன்று கணிதபாட முன்னோடிப் பரீட்சை

கிளி.வலயக்கல்விப் பணிமனையால் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கு கணித பாட அடைவு நிலையை அறியவும், முன்னோடிப் பரீட்சையாகவும் இன்று புதன்கிழமை கணித பாடப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையின் பகுதி II காலை 9.00 - 12.00 மணிவரையும் பகுதி I பிற்பகல் 1.00 - 2.00 மணிவரையும் நடைபெறும்.

பாடசாலைகளுக்குரிய வினாத்தாள்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மூலம் அதிபர்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்வி அமைச்சினால் 30-09-2005 அன்று க.பொ.த. (சா./த) மாணவர்களுக்கான கணிதபாட முன்னோடிப் பரீட்சை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (34)

# கருத்தமர்வு

(முள்ளியவளை)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் நிகொட் திட்ட சமூகவலுவூட்டாளர்களுக்கான கருத்தமர்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரின் ஒழுங்குபடுத்தலில் உடையார்கட்டு குரவயல் தமிழ் வித்தியாலயத்தில் நிகொட் திட்ட முல்லைமாவட்ட சமூகவலுவூட்டாளர் ர.சத்தியதீபா தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி கருத்தமர்வில் தையல், சேமிப்பு, கற்றலின் முக்கியத்துவம், கடமைகள், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்கல் தொடர்பான கருத்துக்கள் வழங்கப்பட்டது.மேற்படி நிகழ்வில் சமூகவலுவூட்டாளர்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் என பெருமளவானோர்கலந்துகொண்டனர். (ஆ)



*போக்குவரத்து விதிமுறைகளுக்கு மாறாக கிளிநொச்சி டிப்போ வீதியில் பேருந்தின் மிதிபலகையில் பயணிகள் பயணிப்பதைப் படத்தில் காணலாம். (படம்–சோதி)*

# பொதுநோக்கு மண்டபம் திறப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர்பிரிவில் நிகொட் திட்டத்தின் மூன்று இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் துணுக்காய் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் அனுசரணையோடு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டப திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் பி.ப. 2.45 மணிக்கு துணுக்காய் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் வி. கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்தினை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டடித்திறந்து வைத்தார். முன்னதாக மங்கல விளக்கினை துணுக்காய் மாதர்சங்கத் தலைவி திருமதி. பரமானந்த ராஜா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை ஆ. பூதத்தம்பி ஏற்றி வைத்தார். தொடர்ந்து முல்லை மாவட்ட அரசாங்க அதிபர், துணுக்காய் பிரதேச உதவி அரசாங்க அதிபர் நா. நந்தகுமார் நிகொட் திட்ட உதவிப் பணிப்பாளர், துணுக்காய் கிராம சேவையாளர் வீ.ரி. சண்மு கநாதன், பாரதி நகர் கிராம சேவையாளர் சி. சண்முகநாதன், துணுக்காய் பிரதேச காவல்துறை துணைப்பொறுப்பாளர் த. மார்த்தாண்டன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ச. ரவிகரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரநிதிகள் அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர். (24)

# யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்தி;

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை

## -நிர்வாக அதிகாரிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கென பல வெளிநாட்டு அமைப்புக்களும்,வெளிநாட்டு அரசுகளும் முன்வந்து வாக்குறுதிகளை வழங்கியுள்ளபோதும் இவ்வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

யாழ். போதனா வைத்தியசாலையின் சேவைத்தரத்திற்கு ஏற்ற விதத்தில் இவ் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவையுள்ளது. இந்தத் தேவைப் பாட்டை அவ்வப்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகைதரும் வெளிநாட்டு, அரச பிரதிநிதிகளுக்கும், ,வெளிநாட்டு அமைப்புக்களுக்கும் வைத்தியசாலை நிர்வாகத்தால் சுட்டிக்காட்டும் போது அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய தாம் உதவுவதாகக் கூறிச்செல்கின்றனர். எனினும் அவர்கள் கூறுவது போன்று உதவிகள் எதனையும் செய்யாததால் யாழ்.போதனாவைத்தியசாலைஅபிவிருத்திப் பணிகள் எதுவும் இன்றி பாதிப்படைந்துள்ளதாக நிர்வாக அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# 850 மின்விளக்குகள் யாழ்.வீதிகளில் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரையும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும்உள்ள வீதிகள் 850 வீதியோர மின் விளக்குகள் பொருத்தப்படவேண்டிய தேவையுள்ளது.

எனினும் இத்தேவைகளைக் கவனத்தில் கொண்டு வீதியோர மின் விளக்குகள் பொருத்தப்படவேண்டிய பல இடங்களில் மின் விளக்குகளைப் பொருத்த சம்பந்தப்பட்டவர்கள் திருப்திகரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

இதன்காரணமாக யாழ்.நகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் உள்ள பல வீதிகள் இரவு நேரங்களில் மக்கள் பயணிக்க முடியாதளவு இருளில் மூழ்கிக்கிடக்கின்றன.

இதனால் இப்பகுதிகளில் நிலவும் இருளைச் சாதக மாகப்பயன்படுத்தி திருடர்கள் வழிப்பறிகளிலும், வன்முறைகளிலும் ஈடுபடுவதாக பலரும் விசனம்தெரிவிக்கின்றனர். (33)

# பொதுமக்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் இலாப நோக்கோடுபடையினரிடமிருந்து பெற்றோல்,டீசல், மண்ணெண்ணை மற்றும் உணவுப் பொருட்களை வாங்கி விற்போர் இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக கைவிடவேண்டும் என கலாச்சர பேரவை வேண்டுகோள்விடுத்துள்ளது. யாழ் குடாநாட்டில் அதிகரித்துள்ள இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் படையினருடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(28)

# மண்டைதீவு வைத்தியசாலையை இயங்கவைக்க கோரிக்கை

(மண்டைதீவு)

யாழ்- மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையை மீண்டும் இயக்குவதற்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தீவக மக்கள் நலன் காப்பகம் கோரியுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் சேதமடைந்து உடைமைகள் சூறையாடப்பட்ட நிலையில் காணப்படும் மேற்படி வைத்தியசாலையை புனரமைத்து மீள இயங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இதனால் மண்டைதீவில் மீளக் குடியமரத் திரும்பியுள்ள மக்கள் தமக்கான வைத்திய சேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக பல கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் யாழ் .போதனா வைத்தியசாலைக்கோ அல்லது ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கோ செல்லவேண்டியநிலை உள்ளது.

இதனால் மக்கள் எதிர் கொள்ளும் அவலங்களையும் இன்னல்களையும் சுட்டிக்காட்டியே தீவகமக்கள் நலன் காப்பகம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது. (33)

# ஒன்பது பாடசாலைகளுக்கு யுனிசெப் உதவி

(வடமராட்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதியிலுள்ள ஒன்பது பாடசாலைகளுக்கு யுனிசெப் நிறுவனம் அடிப்படை வசதிகளான மலசலகூடம், குடிநீர் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென ஒன்பது பாடசாலைகள் வடமராட்சிப்பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இத்திட்டத்தை விரைவில் முடிக்கும்படி வடமராட்சி கல்வி வலயமும், யுனிசெப் நிறுவனமும் குறிப்பிட்ட பாடசாலைகளை வேண்டியுள்ளன.

இத்திட்டத்திற்கென சுமார் இருபத்தைந்து இலட்சம் ரூபா யுனிசெப் நிறுவனத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதற்கட்டமாக சுனாமியால் முழுமையாக அழிக்கப்பட்டு தற்காலிக் கொட்டகைகளில் இயங்கும் பாடசாலைகளுக்கே இவ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (41)

# உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு வீடுகள்

(வலிமேற்கு)

பொன்னாலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்து அயற்கிராமங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் அரை நிரந்தர வீடுகளை வழங்கியுள்ளது.

பொன்னாலை உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து சுமார் 400 குடும்பங்கள் வரையில் இடம் பெயர்ந்து அயற்கிராமங்களான தொல்புரம், முன்வோடை, மூளாய், செம்பாட்டம் தோட்டம் சுழிபுரம் எனப் பல இடங்களிலும் வசித்து வருகின்றன.

இக்குடும்பங்களில் ஒரு பகுதியினராகிய சுமார் 57 குடும்பங்களுக்கே அரை நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அரை நிரந்தர வீடொன்றுக்கு கூரைத்தகடு, கல், மணல். சீமெந்து,மரம் ஆகிய பொருட்களை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தற்போது வழங்கியுள்ளது.

இவ் வீட்டு வேலைகள் மிகத் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதேவேளை இக்குடும் பங்களுக்கு அரைநிரந்தர மலசல கூட வசதிகளைச் செய்த கொடுப்பதற்கு மற்றோர் தொண்டர் நிறுவனம் முன்வந்திருக்கின்றது. (27)

# இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட உவர்நீர்தடுப்பு சுலுசு புனரமைப்பு

(தென்மராட்சி)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது தாக்கி சேதமாக்கப்பட்டிருந்த தொண்டமனாறு உவர் நீர் தடுப்பு சுலுசு மீண்டும் புனரமைக்கப்பட்டுவருகின்றது.

1987ஆம் ஆண்டு காலப் பகுதியில் தொண்டமனாறுப் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரால் இத் தடுப்பு சுலுசு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டிருந்தது.

குறிப்பாக வடமராட்சியின் கப்பூது,கரவெட்டி,மண்டான் மற்றும் கெருடாவில் போன்ற புறக்கிராமங்களில் குடிநீர் உவர் நீராவதை தடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இச்சுலுசு கடல்,நீர் தொண்டமனாறு கடல் நீரேரியூடாக கிராமங்களுக்குள் புகுவதை தடுத்து வந்திருந்தது.

இந்த நிலையில் கடந்த 18 வருடங்களுக்கு மேலாக, இச் சுலுசு பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தமையால் குறித்த கிராமப் பகுதிகளில் குடிநீர் வேகமாக உவர் நீராகி வந்திருந்தது.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் பின்புறமாகவுள்ள தொண்டமனாறு கடல் நீரேரியின் மேலாக உள்ள இச்சுலுசு நிர்மாணப்பணிகள் படையினரது கண்காணிப்பின் கீழ் தற்போது இடம்பெற்றுவருகிறது.

குறித்த கடல் நீரேரிக்கு அப்பாலேயே பலாலி உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

# வடகிழக்கு சமுதாய மீளமைப்புத்திட்டத்தில் வட்டு.துணவிக் கிராமம் அபிவிருத்தி

(வலி-மேற்கு)

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியில்- வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்புத்திட்டத்தின்கீழ் வலி-மேற்கிலுள்ள வட்டு.துணவிக் கிராமம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

சுமார் 80 மில்லியன் ரூபா செலவில் மேற்படி கிராமம் புனரமைக்கப்பட்டு வருவதாக வலி-மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் தெரிவிக்கின்றார்.

வீதிபுனரமைப்பு , மலசல கூடம் அமைத்தல்,மின்சார விநியோகம், பொதுமண்டபம் அமைத்தல், சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கல் ஆகிய திட்டங்கள் மேற்படி கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மேற்படி வேலைகளை மூளாய் சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் பொறுப்பெடுத்துச்செயற்படுத்தி வருகின்றது. (37)

# யாழ். மாவட்டத்தில் இரு மின்சார சுடுகாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இரண்டு மின்சார சுடுகாடுகளை அமைப்பதற்காக நான்கு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க. குணராஜா கூறினார்.

இதனடிப்படையில் முதற் கட்டமாக யாழ்.செம்மணி இந்து மயானம் மற்றும் கோம்பயன் மணல் இந்து மயானம் என்பன தலா இரண்டு மில்லியன் ரூபா செலவில் மின்சார சுடுகாடுகளாக மாற்றப்படவுள்ளன.

சடலங்களை எரியூட்டுவதாலும்.சடலங்களை எரியூட்டும் விறகுகளுக்காக மரங்களை தறிப்பதாலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் என.

இந்த மின்சார சுடுகாட்டில் சடலங்களை எரியூட்டி அவற்றின் சாம்பரை உரித்துடையோரிடம் ஒப்படைக் கவும் தொழில் நுட்பவியலாளர்கள் நியமிக்கப்படுவர் என அறிவிக் கப்பட்டுள்ளது. (33)

## இளைப்பாறியவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஊழியர்கள் சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கங்கத்தில் இருந்து இளைப்பாறியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாநகரசபை ஆணையாளர் க.குணராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கனகசபாபதி, மாநகரசபை செயலாளர் திருமதி வசந்த குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (கீ)

# வலி.மேற்கு கலை இலக்கிய விழாவையொட்டி இளைஞர், யுவதிகளுக்கு கலை இலக்கியப்போட்டி

(வலிமேற்கு)

வலி-மேற்கு கலாசாரப்பேரவை தனது கலை இலக்கியப் பெருவிழாவையொட்டி இளைஞர், யுவதிகளுக்கிடையே கலை இலக்கியப்போட்டிகளை நடத்தவுள்ளது என்று கலாசாரப் பேரவையின் தலைவரும் வலி-மேற்குப் பிரதேச செயலருமான சி.ஏ. மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் தனிநபர்-குழுப்போட்டி என இரண்டு பிரிவுகளாக நடைபெறவிருக்கின்றன.

கர்நாடக இசை, சாஸ்திரிய நடனம்,வயலின், வீணை . புல்லாங்குழல், மிருதங்கம், ஆகிய போட்டி கள் தனிநபர் போட்டிகளாகவும் - கிராமிய நடனம் ,கிராமிய இசை போன்ற குழுக்களுக்கிடையேயான போட்டிகளாகவும் நடாத்தப்படவுள்ளன.

இவற்றுடன் இலக்கியம் காட்டும் இயற்கைவளம் யாழ்ப்பாண இலக்கிய வளர்ச்சியின்போக்கு ஒழுக்கம் விழுப்பம் தரும் போன்ற தலைப்புக்களை மையப்படுத்துவதான பேச்சுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

வலி- மேற்குப் பிரதேசத்திற்குட்பட்ட 15 தொடக்கம் 20 வயது வரையான இருபாலாரும் போட்டிகளில் பங்குபற்றலாம். வெற்றி பெறுபவர்களுக்கு சிறந்த பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான விண்ணப்பபடிவங்களை வலி- மேற்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (37)

# மக்களைப் பரீட்சித்துப் பார்க்க — சிங்களத் தலைவர்கள் தயாரில்லை!

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு சாத்தியமானதொன்றா? சிறிலங்காவின் அரசியல் யாப்பும், சிங்கள அரசியல் கட்சிகளும் இதற்கு இடமளிக்குமா? இவை குறித்து தீர்க்க மான முடிவுகள் பெறப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் அரசியல்தீர்வென்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கானதொரு பொறியாகவே இருக்கமுடியும்.

சுனாமி அனர்த்த நிதியுதவி முகாமைத்துவத்திற்கென உருவாக்கப்பட்ட பொதுக்



கட்டமைப்பு உயர்நீதிமன்றத்தின் இடைக் காலத் தீர்வினால் முடங்கிப்போயுள்ளது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பு பொதுக் கட்டமைப்பிற்குத் தடை எதுவும் விதிக்கப்பட வில்லை, சில சரத்துக்களுக்கே தடை விதிக் கப்பட்டதெனக் கூறிக் கொண்டாலும் பொதுக் கட்டமைப்பின் எதிர்காலத்தை உயர்நீதி மன்றத்தின் இத்தீர்ப்பு முடக்கியுள்ளதை சகலருமே அறிவர்.

இப்பொதுக்கட்டமைப்பானது இனப்பிரச் சினைத் தீர்விற்கான ஒரு முன்னோடி நடவடிக் கையாக இருக்கும். சமாதானப் பேச்சுவார்த் தைகளை முன்னெடுக்க வாய்ப்பானதொரு சூழ்நிலை உருவாக்கும் என்ற அபிப்பிராயம் கொள்ளப்பட்டதாயினும், பொதுக்கட்டமைப்பின் முடக்கமானது சமாதானப்பேச்சுவார்த்தை களையும் முடக்கியுள்ளது என்பதே வெளிப் படையானது.

அதுமட்டுமன்றி பொதுக்கட்டமைப்பு தொடர்பான நீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பானது - இனப்பிரச்சினை தொடர்பான எந்தவொரு அரசியல் தீர்வு நடவடிக்கையையும் முடக்க முடியும் என்பதற்கு தெளிவானதொரு எடுத்துக்காட்டாகும். அதாவது, இந்நீதிமன்றத் தீர்ப்பின்படி விடுதலைப்புலிகளும், சிறிலங்



காவில் ஆட்சியில் உள்ளவர்களும் எத்தகைய உடன்பாட்டையும் மேற்கொள்ளலாம் அதற்கு அனுமதி உண்டு. ஆனால், அவற்றை அமுல் செய்வதற்குச் சிறிலங்கா அரசியலமைப்பு இடமளிக்கமாட்டாது என்பதாகவே உள்ளது.

சிறிலங்கா அரசியல் யாப்பு பாட்சி முறையை தீவிரமாக வலியு ஒன்றாகும். வேறொரு வகையில் பார்த்தால், தமிழர் தாயகப் பகுதி அரசியல் ரீதியில் தனியானதொரு அலகாக மாறிவிடக் கூடாது என்ற நோக்குடன் வரையப்பட்டது எனச் சொன்னாலும் தவறானதாக இருக்கமாட்டாது.

ஆனால், இன்றைய அரசியல் சூழ் நிலையோ முற்றிலும் வித்தியாசமானதாகும். சிறிலங்கா அரச இறைமை, பிரதேச ஐக்கியம், பாதுகாப்பு என்பன குறித்து எவ்வாறுதான் கூச்சல் இட்டாலும் யதார்த்தம் வேறு விதமானதாகவே உள்ளது.

அதாவது, இலங்கைத்தீவில் இன்று அங்கீகரிக்கப்பட்டதும், அங்கீகாரத்துக்காகப் போராடுவதுமாக இரு அரசுகள் உள்ளன என்பதே யதார்த்தமானதாகும், இதில் அங்கீகாரத் திற்காகப் போராடும் அரசிடம் விடுவிக்கப்பட்ட தொரு பிரதேசம், ஒரு இராணுவம், ஒரு காவல் துறை, நீதித்துறை, பொருளாதாரக் கட்டமைப்பு உட்பட்ட ஒரு தனியரசிற்கான பல்வேறு கட்ட மைப்புக்கள் உள்ளன.

இத்தகையதொரு நிலையில், ஒற்றை யாட்சி முறையை வலுப்படுத்தும் வகையிலான அரசியல் யாப்பு எவ்வாறு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயங்களுக்கு அனுமதி அளிக்க முடியும்? இங்கு அரசியல் யாப்பு என்பது குறைகூறப்படுவதற்கானதல்ல. ஏனெனில், அரசியல் யாப்பை உருவாக்கிய அரசியல் வாதிகளே குறைகூறத்தக்கவர்கள்.

அத்தோடு, இன்றைய அரசியல் - இராணுவ சூழ்நிலையில், இனப்பிரச்சினைக்கு தற்போதைய அரசியல் யாப்பிற்கு உட்பட்டதாகத் தீர்வு எட்டப்பட முடியாது என்பது அரசியல்வாதிகளுக்குத் தெரியாததல்ல. ஆனால், அதனை ஒருங்கிணைந்து மாற்றுவதற்கு அரசியல்வாதிகள் தயாராக இல்லை.

மாறாக, தமது தீர்மானங்களுக்கு நீதி மன்றின் மூலம் தடையுத்தரவுகள் வருதல் வேண்டும் என விருப்பம் கொண்டவர்களாகவே உள்ளனர். அதாவது, ஒற்றையாட்சி வரம்பிற்கு அப்பாற்பட்டுச் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அவர்கள் முற்படுவதாக இல்லை.

ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்தியா - சிறிலங்கா உடன்பாட்டைச் செய்து கொண்ட போது அரசியல் யாப்பில் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்தார். இதற்கு அன்று இந்திய இராணுவத்தின் வருகை அவருக்கு அவசியமானதாக இருந்தமையே காரணமாகும். ஆகையினால்தான் உடன்பாட்டைச் செய்துகொண்ட ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசியல்யாப்பில் திருத்தைச் செய்யத் தயாராக இருந்தார்.

ஆயினும், அமுலாக்கத்தில் தனக்குத் தேவையான விடயத்துடன் மட்டும் நின்று கொ ர்டார். இதன் விளைவானது மாகாணசபைகள் எந்தப் பிரதேசங்களுக்காக உருவாக்கப்பட்டதோ - எந்த மக்களுக்காக முன்வைக் கப்பட்டதோ அவர்களுக்காகச் செயற்படவில்லை. மாறாக முடக்கப்பட்டது என்பதே உண்மையாகும்.

ஆனால், இன்றைய ஆட்சியாளர்களிடம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பது பலவீனமேயாயினும், நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டவராக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருக்கையில் பொதுக்கட்டமைப்பு போன்ற விடயங்களால் முன்னேற்றம் காண முடியாது போனமை ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு விடயமாகமாட்டாது. பெரும்பான்மை அரசாங்கம் ஒன்றைக் கலைத்து சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை ஆட்சியில் அமர்த்த முடியுமானால் பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் என்பது ஏன் சாத்தியப்பாடான தொன்றாக இருக்கமாட்டாது?

ஆனால், ஆட்சியதிகாரத்தில் உள்ளவர்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை அமுல் செய்யும் நிலையில் இல்லை. அரசாங்கம் அரசியல் யாப்பில் திருத்தம் செய்யும் அளவிற்குப் பாராளுமன்றத்தில் பலம் பெற்றதாக இல்லை என்ற வாதம் ஏற்புடையதொன்றல்ல. ஏனெனில், இனப் பிரச்சினைக்கு தீர்வாகக்கூடிய திட்டம் ஒன்றை எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் முன் வைக்கத் தயாராக இல்லை என்பதே உண்மையாகும்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வென்பது எத்தகைய ச சாத்தியமானதாகும். ஏனெனில், ய ாத்தத்தினை விளங்கிக் கொண்டாலும் அதற்கு ஏற்ப தமது அரசியல் நிலைப்பாட்டை மேற்கொள்ளத் தயாராக இல்லாத அரசியல்வாதிகளினால் எவ்வாறு பிரச்சினைக்குத் தீர்வு என்பது சாத்தியமானதாகும்.?

கட்சித்தலைவர்களும், அரசியல் வாதிகளும் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் எனத் தேர்தலின்போது வாக்குறுதிகளை அளிப்பதினால் மட்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியுமா? இவ்வாக்குறுதியை நம்பி வாக்களிப்பதினாலோ அன்றி ஆதரவாகச் செயற்படுவதினாலோ சமாதானம் ஏற்பட்டுவிடும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?



இன்றைய நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வொன்று காணப்பட வேண்டுமானால், இன்றைய அரசியல் யதார்த்தத்தினை சிறிலங்கா அரசாங்கத்தரப்  எதிர்த்தரப்பும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதனை மக்களுக்குப் புரியவைக்கும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபடவேண்டும். இதன் மூலம் அரசியல் மாற்றம் ஒன்றை மேற்கொள்வத கு மக்களைத் தயார்ப்படுத்துதல் வேண்டும்.

ஆனால், சிங்கள அரசியல்வாதிகள்-இதில் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோ எவருமே விதிவிலக்கானவர்கள் அல்ல. எவருமே தமிழ்மக்களின் உரிமைகள் எந்தளவில் பகிர்ந் தளிக்கத் தாமோ தமது கட்சியோ தயாராக உள்ளது என வெளிப் படுத்தத் தயாராக இல்லை. இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்ற மொட்டையான அறிவிப்பே அவர்களிடம் வெளிவருபவையாக உள்ளன.



இவ்வாறு அவர்கள் நடந்து கொள்வதற்கு தமது அரசியல் எதிர்காலம் பெரும் பாதிப்பிற்கு / அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவிடும் என்ற பயமே காரணமாகும். ஆனால், இது இன்னமும் பரீட்சித்துப் பார்க்கப்படாத பகுதி என்பதே உண்மையாகும். அதாவது, சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், அரசியல் தீர்விற்கும் ஆதரவாக வாக்களித்த சிங்கள மக்கள் தமிழருடனான அதிகாரப் பகிர்விற்கு எந்தளவிற்கு ஆதரவு அளிப்பார்கள் என்பது பரீட்சிக்கப்பட வேண்டியதாகும்.

சிங்கள மக்கள் முன்புபோன்று இன்றில்லை. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகின்றார், 80 சதவீதமான மக்கள் சமாதானத்திற்கு ஆதரவாக உள்ளனர் என்று. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அதனை மறுக்கவில்லை. ஆனால், இந்நிலை அறுபதுகளிலோ, எழுபது களிலோ எண்பதுகளிலோ அன்றி தொண்ணூறுகளின் ஆரம்பத்திலோ கூட இருந்ததில்லை. ஆனால், தொண்ணூறுகளின் நடுப்பகுதியிலும், 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மக்கள் அவ்வாறு இல்லை.

அதாவது எழுபதுகளிலும், எண்பது களிலும் போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் எனப் பேசிய / செயற்பட்ட சிங்கள அரசியத் தலைவர்களினால் இன்று அவ்வாறு பேச முடியுமா? இன்று பேரினவாதத்திற்குத் தலைமை தாங்கத் துடிக்கும் ஜே.வி.பி.யினால் கூட இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு தான் ஒரே தீர்வு என்று பேச முடியுமா? அன்றி பௌத்த பீடாதிபதிகளால் கூட யுத்த நிறுத்தத்தைக் கைவிட்டுப் போருக்குச் செல்லுங்கள் எனக் கட்டளை இடத்தான் முடியுமா?

ஆனால், அரசியல்வாதிகள் சமாதானத்தைப் பற்றிப் பேசினாலும், யுத்தம் குறித்த தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. இதற்கு எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் மீதான அச்சமே காரணமாகும். அதாவது, இதனையே தமக்கு எதிரான அரசியல் ஆக்கி தமது எதிர்கால அரசியலைச் சிதறடித்து விடுவார்களோ என்ற பயமே ஆகும்.

ஆகையினால், அரசியல்வாதிகள் யாவரும் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவதற்கும் தயாராக உள்ளனரே ஒழிய தம்மால் தமிழ் மக்களுக்கு எதனைப் பகிர்ந்தளிக்க முடியும், தமிழ் மக்களைத் திருப்திப்படுத்த எவற்றை வழங்கத் தமது கட்சி தயாராக உள்ளது என்பதைக் கூறவோ, தெளிவுபடுத்தவோ அவர்கள் தயாராக இல்லை.

ஆனால், தற்போதைய அரசியல் யதார்த்தத்தனமானது இனப்பிரச்சினைத் தீர்விற்கு சிங்கள அரசியல்வாதிகள் எத்தகைய தீர்வை முன்வைக்க அன்றி ஏற்றுக்கொள்ளப் போகின்றார்கள் என்பதைப் பொறுத்ததே. அதாவது, சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது எதை வழங்கத் தயாராகவுள்ளனர்? என்பதே. ஆகையினால், தற்பொழுது சிங்கள அரசியல்வாதிகள் பேச வேண்டியது சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றியதல்ல. அரசியல் யாப்பு மாற்றமோ அன்றித் திருத்தம் பற்றியதாகவே இருக்க முடியும்.

அதாவது, மனிதாபிமானப் பணிகளுக்கே தடை விதிக்கத்தக்கதான அரசியல் யாப்பைக் கொண்டுள்ள அரசுடன், அதிகா பரவலாக்கல் பற்றிப் பேசுவதினால் பயன் ஏதும் கிட்டிவிடப் போவதில்லை. அதாவது, அரசியல் யாப்பில் மாற்றமோ அன்றித் திருத்தமே இன்றி இனப்பிரச்சினைத் தீர்விற்குப் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தம் ஏதுமில்லை. ஆகையினால், அரசியல் யாப்பு திருத்தத்திற்குத் தயாராக இல்லாத சிங்கள ஆட்சியாளர்களுடனோ, அரசியல் கட்சிகளுடனோ சமாதானப் பேச்சு என்பது அர்த்தமற்றதாகவே இருக்கும்.

ஏனெனில், அரசாங்கத்தின் தீர்மானம் ஒன்றை அரசியல் யாப்பு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத நிலையில் அரசாங்கத்துடன் பேசித்தீர்மானிப்பதில் பயன் என்ன? அதாவது,

**ஜெயராஜ்**

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் புலிகளும்-சனாதிபதியும் உடன்பாட்டிற்கு வரமுடியும். ஆனால், அமுலாக்க அரசியல் யாப்பு அனுமதிக்கவில்லையென உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குமானால் பேசித்தான் என்ன? பேசாதுவிட்டால்தான் என்ன? பேசாது விட்டால் நேரமும், காலமும் விரையமாவது கூடத் தவிர்க்கப்படலாம் அல்லவா?

# 18-07-2005
# 24-07-2005




18

□ தமிழ் மக்கள் தன்னாட்சி, சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ்வதற்கும் தமது அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கும் இயல்பு வாழ்க்கையை நிலைபெறச் செய்வதற்கும் சர்வதேச நாடுகளே பொறுப்பாகும் என்பதைச் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தும் முகமாக மக்கள் போராட்டங்களை பரந்த முறையில் முன்னெடுப்பதற்கும், யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற தற்போதைய நாட்டின் சூழ்நிலை சம்பந்தமான கலந்துரையாடலில் தீமானம்.



□ வடமராட்சி கிழக்கு போர் எழுச்சிக் குழுக்களின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு மக்கள் ஒன்று திரண்டு போர் முழக்கம் என்னும் தொனிப் பொருளில் பேரணி ஒன்றை நடத்தினர்.



□ ஓயாத அலைகள் - 01 வெற்றியின் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா முல்லைத்தீவு நகரில் நடைபெற்றது.

19.

□ அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதமற்ற புலிகளின் பாதுகாப்பினை சிறிலங்கா அரசாங்கம் உறுதி செய்யாவிட்டால் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் நடுத்தூண் ஆபத்தைச் சந்திக்க நேரிடுமென சிறிலங்காவிற்கான அமெரிக்க தூதுவராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

20

□ யுத்த நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் ஒழுங்காக அமுல்படுத்துவதனூடாகத்தான் இரு தரப்பு நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பலாம். எம்மீதும் எம் மக்கள் மீதும் ஒரு நிழல் யுத்தத்தை திணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இரு தரப்புக்குமிடையில் நேரடிச் சந்திப்புக்களை ஒழுங்கமைப்பது என்பது சாத்தியமில்லாத ஒரு விடயம் என்பதை நோர்வேத் தரப்பிடம் தெளிவாக வலியுறுத்தியிருக்கின்றோம். இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மற்றும் நோர்வேத் தரப்பினர் ஆகியோரை கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் சந்தித்துப் பேசிய பின் பத்திரிகையாளர்களிடம் தெரிவிப்பு.



□ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் சிறிலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்து விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாகவும், விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

□ கல்முனையில் கிராம அலுவலர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொலை.

□ விடுதலைப்புலிகளுக்கும், அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் இடம்பெற்றது.

21

□ அக்கரைப்பற்று ஆலையடிவேம்புப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தர்மசங்கரி விளையாட்டரங்கில் நடைபெற்ற கைக்குண்டு வீச்சில் பொலிஸ் அதிரடிப்படையினர் மூவர் படுகாயம்.

□ கொழும்பிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பெருந்தொகையான பொருட்கள் புல்லுமலைச் சோதனைச் சாவடியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் பறிமுதல்.

□ அம்பாறை மாவட்டம் பொத்துவில் நகரில் இனந்தெரியாதோரின் தாக்குதலில் சிறிலங்கா பொலிசார் ஒருவர் பலி.

□ அம்பாறை மாவட்டம் பொத்துவில் நகரில் பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் பலி.

□ அம்பாறை அக்கரைப்பற்றுப் பிரதேசத்திலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகங்கள் இரண்டு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் சேதமாக்கப்பட்டன.

□ இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சி எதுவுமின்றி சிங்கள அரசியல் தலைமைகள் மெத்தனப் போக்குடன் நடந்து கொள்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோர்ன் வீற், சுவிற்சர்லாந்து தூதுவர் பேர்னாட்சினோகஸானே ஆகியோரிடம் தெரிவிப்பு.

22

□ தென்மராட்சியில் இரண்டு இடங்களில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ வாகன விபத்துக்களில் பொதுமக்கள் மூவர் படுகாயம்.

23

□ எமது விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து எமது தேசத்திலேயுள்ள இயற்கை வளங்களையும் நாங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக எங்களுடைய தலைவர் மிக நெருக்கடியான காலகட்டத்திலும் அதற்காகப் போராடியிருக்கிறார் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் தொடக்க நாள் நிகழ்வில் தெரிவிப்பு.




□ திருகோணமலை தம்பலகாமத்தில் ஊர்காவல் படைச் சிப்பாய் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை.

□ மாவீரர் லெப்ரினன்ட் செல்லக்கிளி அம்மானின் 22ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு பலாலி வீதி தபால் பெட்டிச் சந்தியிலுள்ள செல்லக்கிளி அம்மான் நினைவுத்தூபி முன்றலில் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.



□ பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த குடாப்பொக்குண பகுதியில் கருணா குழுவோடு நெருங்கிச் செயற்பட்ட இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

□ திருமலை தம்பலகாமம் பொற்கேணி நான்கு வாசல்பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் தயிர் வியாபாரி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

□



இலங்கைத்தீவில் யுத்த நிறுத்தம் முறிந்துவிடாமல் இருக்க வேண்டுமானால், முதலில் அது தொடர்பான ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் தமிழர் தாயகத்திலிருந்து துணைப்படைகள், ஆயுதக் குழுக்கள் போன்றவற்றின் ஆயுதங்கள் களையப்பட்டு அக்குழுக்கள் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். அப்படிச் செய்யுமாறு வெறும் அறிக்கைகளை விடுவதில் பயனில்லை. அதற்குரிய சரியான அழுத்தத்தை, உரிய நிர்ப்பந்தத்தை அதற்கே உரிய முறையில் இலங்கை அரசு மீது சர்வதேச சமூகம் பிரயோகிக்க வேண்டும். அப்படிப் பிரயோகிக்குமாறு சர்வதேச சமூகத்தை நோர்வே அனுசரணையாளர்கள் வழிப்படுத்த வேண்டும் இவ்வாறு நோர்வேப் பிரதிநிதி எரிக்சூல் ஹெய்ம், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் உயர் பிரதிநிதி சொன்ட்ரி பிஜோட்வெற் ஆகியோரிடம் லண்டனில் விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தினார்.

□ சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்தகொட்டேகொட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் படையினரை எந்நேரமும் உஷார் நிலையில் இருக்கும்படியும் உத்தரவிட்டார்.

24

□ பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த மீனவர் மூவர் சிறிலங்கா கடற்படையினரால் கைது.

□ காத்தான் குடி பிரதான வீதியிலுள்ள ஜெயன் மௌலவான பள்ளிவாசலுக்கு முன்னாலுள்ள மாயானத்திற்கு அருகில் கைக்குண்டொண்டு வீசப்பட்டது.

□ பெருந்தோட்டச் சிறுவர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஹட்டன் நகரில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

□ □ □ □ □ □ □ □ □ □

## திருக்குறள் தமிழ்இலக்கியத்திறன் தேர்வு முடிவுகள்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் ஆண்டு தோறும் நடாத்தப் பெறும் திருக்குறள் மாநாட்டையொட்டி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் நான்கு தொடக்கம் ஆண்டு 13 வரை கற்கும் மாணவர்களுக்கு நடாத்தப்பெற்ற தேர்வுக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன.

இவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் கோட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் நடைபெறும் விழாக்களில் வழக்கப்பெறும் என கிளி. மாவட்ட தமிழ்ச் சங்கம் அறிவித்துள்ளது.(பெயர்கள் தமிழ் சங்கத்தால் வெளியிடப்பட்டதன் வடிவத்தில் பிரசுரமாகியுள்ளது.)

கோட்ட மட்டத்தில் பரிசும், சான்றி தழும் பெறுவோர்.

**பிரிவு 'அ'**

**கரைச்சிக் கோட்டம்**

முதலாம் இடம் செல்வன் ந. விவேந்தன், கிளி. மத்திய கல்லூரி இரண்டாம் இடம் செல்வி வி.அனுசா, திருவையாறு உ.நி.ப. மூன்றாமிடம் செல்வி ப. லதாமினி, கிளி. மத்திய கல்லூரி.

**பூநகரிக் கோட்டம்**

முதலாமிடம் செல்வி சி. சுதர்சிகா, பூநகரி உ.நி.ப.

**பிரிவு 'ஆ'**

**கரைச்சிக் கோட்டம்**

முதலாமிடம் செல்வன் தி. துளசிகன், கிளி. மத்திய கல்லூரி. இரண்டாமிடம் செல்வி த. தர்சியா, இராமநாதபுரம் மேற்கு, அ.த.க.பா. மூன்றாமிடம் செல்வி. இ. கச்தூரி புனிதா திரேசா பெண்கள் கல்லூரி. மூன்றாமிடம் செல்வி. யோ நிரோயா, புனிதா திரேசா பெண்கள் கல்லூரி.

**கண்டாவளைக் கோட்டம்**

முதலாமிடம் செல்வி சு. கோசலா முருகானந்தா உ.நி.ப., இரண்டாமிடம் செல்வி தி. சுகாயினி, முருகானந்தா உ.நி.ப. மூன்றாமிடம் செல்வி தி. யாழினி, பரந்தன் இந்து உ.நி.ப.

**பூநகரிக் கோட்டம்.**

முதலாமிடம் கு.நிரோயா, முழங்காவில் உ.நி.ப., இரண்டாமிடம் செல்வன் த. அமைதிவண்ணன், ஜெயபுரம் அ.த.க.ப., இரண்டாமிடம் செல்வி பூ. பாலராயி, முழங்காவில் உ.நி.ப. இரண்டாமிடம் செல்வி ப. சிறிவனசா, கறுக்காய்த்தீவு உ.நி.ப. மூன்றாமிடம் செல்வி. நா. நிசாந்தி முழங்காவில் உ.நி.ப.

**பளைக்கோட்டம்**

செ. யீவதாசு, பளை றோ.க.த.ப்ள்ளி,

**பிரிவு 'இ'**

**கரைச்சிக் கோட்டம்**

முதலாமிடம் செல்வி இ. அயித்தா, திருவையாறு உ.நி.ப. இரண்டாமிடம் செல்வி. தி. சுபாங்கி, கிளி. மத்தியகல்லூரி. இரண்டாமிடம் செல்வி. ஞா. சுடர்விழி திருவையாறு உ.நி.ப., மூன்றாமிடம் செ. சயந்தினி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி,

**பளைக் கோட்டம்**

முதலாமிடம் செல்வி அ. ரேணுகா, பளை மத்திய கல்லூரி, இரண்டாமிடம் செல்வி. சி.நிரோயினி, பளை றோ.க.த.க.ப. மூன்றாமிடம் செல்வன் வே.யோவேல், பளை றோ.க.த.க.ப.

**பூநகரிக் கோட்டம்**

முதலாமிடம்செல்வி கு.டினேக்கா, பூநகரி உ.நி.ப. இரண்டாமிடம் செல்வி. மு.சுலோயினி, நாச்சிக்குடா அ.த.க.2,

**கண்டாவளைக் கோட்டம்**

முதலாமிடம் செல்வி. ப. விசயசாந்தினி, பிரமந்தனாறு உ.நி.ப. இரண்டாமிடம் செல்வி இ.மகிந்தினி,தருமபுரம் உ.நி.ப. இரண்டாமிடம் இ. துசயந்தினி தருமபுரம் உ.நி.ப. மூன்றாமிடம், செல்வி. மு.சிறிசஞ்சிலா,பிரமந்தனாறு உ.நி.ப. மூன்றாம்இடம், செல்வி ச.ஐசுவரியா, முருகானந்தா உ.நி.ப.

**பிரிவு 'ஈ' கரைச்சிக்கோட்டம்.**

முதலாம் இடம், செல்வி. பா.சுகன்யா, கிளி.மத்தியகல்லூரி. இரண்டாம் இடம், செல்வி ர.வைச்ணவி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, இரண்டாம்இடம் செல்வன். நா.சுடர்வன்னன், திருவையாறு உ.நி.ப. மூன்றாம்இடம்: செல்வி, இ.சோபிகா, கிளிநொச்சி உ.நி.பள்ளி.

**கண்டாவளைக் கோட்டம்.**

முதலாம் இடம், செல்வி. சி.சங்கீதா, பிரமந்தனாறு உ.நி.பள்ளி. இரண்டாம் இடம்.செல்வி த.சாத்வீகா. முருகானந்தா உ.நி.பள்ளி, மூன்றாம் இடம், தெ.இந்துயா, முருகானந்தா உ.நி.பள்ளி.

**கோட்ட மட்டம்-பிரிவு "ஈ"**

**பூநகரிக் கோட்டம்**

முதலாம் இடம் செல்வி. சி.மலறீசா, ஜெயபுரம் அ.த.க பள்ளி, இரண்டாம் இடம் ,செல்வி, ரா.பானுமதி, செயபுரம் அ.த.க.பள்ளி. மூன்றாம்இடம்,செல்வி.பிரியநந்தினி, நாச்சிக்குடா அ.த.க.பள்ளி.

**பளைக்கோட்டம்**

முதலாம் இடம் செல்வி.ஈ. அனிச்ரியா, பளைறோ.க.த.க.பள்ளி. இரண்டாம்இடம், செல்வி.வெ. டொர்சனா-பளை றோ.க.த.க.பள்ளி. மூன்றாம்இடம் செல்வி கே.தமிழினி, பளை றோ.க.த.க.பள்ளி.

**பிரிவு "உ"**

**கரைச்சிக் கோட்டம்**

முதலாம் இடம் செல்வன். கி.சே யோன்,திருவையாறு உ.நி. பள்ளி இரண்டாம்இடம், செல்வி. ந.சாமந்தி, திருவையாறு உ.நி.பள்ளி. மூன்றாம் இடம்,செல்வி.ய.கரிசிகாஈ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப, மூன்றாம்இடம் செல்வன். மா.சுயீவன், கிளிநொச்சி உ.நி.ப.

**பளைக்கோட்டம்.**

முதலாம்இடம் செல்வன். த.கவிசாந், பளை மத்திய கல்லூரி. இரண்டாம் இடம்.செல்வி. வி.சாளினி, பளைமத்திய கல்லூரி. மூன்றாம் இடம் ச.கோமளகௌளி,பளை மத்திய கல்லூரி.

**பூநகரிக்கோட்டம்.**

முதலாம்இடம் செல்வன். மு.விதுசன், ஜெயபுரம் அ.த.க.பள்ளி, இரண்டாம்இடம், செல்வன் சிறி. நிதர்சன், ஜெயபுரம் அ.த.க.ப்ள்ளி. இரண்டாம் இடம், மு.கிதுசன், ஜெயபுரம் அ.த.க.பள்ளி,

**கண்டாவளைக் கோட்டம்.**

முதலாம் இடம் செல்வி. இ.ரியன்சியா,தருமபுரம் உ.நி. பள்ளி. இரண்டாம்இடம், செல்வி.ச. விதுலா, பிரமந்தனாறு உ.நி.பள்ளி, இரண்டாம் இடம் சி.கீதான்சலி, முருகானந்தா உ.நி.பள்ளி.மூன்றாம்இடம் செல்வன். இ.உசாந்தன், முருகானந்தா உ.நி.பள்ளி, மூன்றாம் இடம் செல்வி. வி.சயானா, முருகானந்தா உ.நி.பள்ளி.

(நாளை மாவட்டமட்டத்தில் பரிசும் சான்றிதழும் பெறுவோர் விபரம் வெளியாகும்.)

# சந்திரிகாவுடன் பொது இணக்கப்பாடு இல்லை; ஐ. தே. க திட்டவட்டமாக அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவுடன் பொது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தி செயற்படுவதற்கான எந்தவொரு திட்டமும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து திஸ்ஸ அத்த நாயக்க கூறியதாவது

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைப்பதைத் தவிர சந்திரிகாவுடன் பொது இணக்கப்பா டொன்றை ஏற்படுத்தி செயற்படுவதற்கான எந்த யோசனையும் கட்சிக்கு இல்லை. நாம் எமது தொகுதிகளில் தற்போது மறுசீரமைப்பு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறோம். எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதற்கு முகம் கொடுக்க ஐக்கிய தேசியக்கட்சி தயாராகவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அமைப்பாளர்களை நியமிக்கும் வேலைகள் 99 சதவீதம் முடிவடைந்துவிட்டன.

கொழும்பு மாவட்டத்தில் அவிசாவளை, வடகொழும்பு, கம்பஹா மாவட்ட த்தில் கட்டான, களுத்துறை மாவட்டத்தில் பேருவளை, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை, இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிபிட்டிய ஆகிய இடங்களுக்கான அமைப்பாளர்களை நியமிப்பது மட்டுமே எஞ்சியுள்ளது என்றார் அவர்.

## 14 ஆம் ஆண்டில் சராஎனும் மாவீரனுக்கான அஞ்சலிப்பயணம்..!



பிறப்பு
1962-04-19

வீரச்சாவு
1991-07-27

## லெப்.கேணல் சரா
(சின்னத்துரை ஜீவராசா-கல்வியங்காடு)

உலக ஒழுங்கில் பயணிக்க வேண்டும்
இல்லையேல் நாம் பயங்கரவாதிகளாம்!
அந்த ஒழுங்கு தான் என்ன?
"சனநாயக முலாம் பூசப்பட்ட
நயவஞ்சக அரசியல்"
இதைத்தான் உலக வல்லரசுகள்
எம்மீது திணிக்கின்றன.

ஏய் தமிழினமே!
இன்னும் நீ விழி திறக்கவில்லையா?
தாய் நாட்டின் "பொக்கிசங்களை" சூறையாட
"சுனாமி" அலைகளின் பெயரால்
எத்தனையோ "ராஜதந்திரிகளின் பார்வை"
எம்மீது விழுந்திருக்கின்றது.
இதன் விளைவு தான் என்ன?
"அரசியல், இராணுவ சதுரங்க ஆட்டத்தில்
அதிஉயர்விழிப்பாய் இருங்கள்"
எனும் தாரக மந்திரம் தான் கிடைத்தது.

எம் மதிப்பிற்குரிய மாவீரனே!
சரா அண்ணாவே!
உலக ஒழுங்கு; நயவஞ்சக அரசியல்;
ராஜதந்திரிகளின் பார்வை!
இவைகளால் ஏற்படும் பாதிப்புக்களைக்கண்டு
நாம் சோர்ந்து விடவில்லை.
"தமிழினம் தலை நிமிர்ந்து வாழவேண்டும்"
என்பதற்காக நீங்கள்
தமிழீழத்தை முத்தமிட்டீர்களே!

ஆனையிறவு "நெடுஞ்சாலை திறப்பிற்கான" வரலாற்றில்
உனது வீரமும் "அத்திவாரக்கற்களாக" மிளிர்கின்றது.
ஆண்டுகள் பல சென்றாலும்
எங்கள் இறுதி மூச்சு ஓயும் வரை
உங்கள் இலட்சியக்கனவுகளுக்கு
புத்துயிர் ஊட்டுவோம்.

தகவல்:
தம்பி மானா
கல்வியங்காடு.

(18)

மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு, கிழக்கு மாகாணசபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை புனரமைக்கும் திட்டம் (கார்ப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல.2043-SRI(SF)

# கேள்வி கோரல்-இல.04
# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01 போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை புனரமைக்கும் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாக பல தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்குள் இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக் காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/ED/18 | மு/முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் வகுப்பறைக் கட்டடம், நீர் மற்றும் மலசலகூட வசதிகள் புனரமைத்தல் | M7 | 48,400 |
| | MU/CAARP/ED/19 | மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வகுப்பறைக்கட்டடம் நீர், மற்றும் மலசல கூட வசதிகள் புனரமைத் தல். | M7 | 43,180 |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர் களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

- i நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- ii இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD டுடன் மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.
- iii கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள 01.07.2003 இற்குப் பின் இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களை திருப்திகரமாக ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ செய்திருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
- iv "ICTAD" வழிகாட்டல்முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
- v மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
- vi ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04 பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003 இற்குப் பின் பதிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ முடித்திருந்தால் ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு (CAARP) திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.

05 தகுதி வாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

06 ஒப்பந்த ஆவணங்களை 2005 ஓகஸ்ட் 01 இலிருந்து 2005 ஓகஸ்ட் 10 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.

07 முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, முல்லைத்தீவு NECORD, அலுவலகத்தில் 2005 ஓகஸ்ட் 12 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

08 கேள்வி முன் திகதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அது 9 ஆம் பந்தியில் குறிப்பிட்ட திகதியில், இடத்தில் விநியோகிக்கப்படல் வேண்டும்.

09 அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, CAARP, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2005 ஓகஸ்ட் 16 முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவு களுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

**திருமதி. இமெல்டா சுகுமார்,**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை/ அரசாங்க அதிபர்.**
**முல்லைத்தீவு மாவட்டம்**

(சி.12451)

# தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்க படையினருக்கு விமான உதவி

(புதுடில்லி)

தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்க பாதுகாப்பு படைக்கும், பொலிசாருக்கும் போர் விமானப் பாதுகாப்பு வழங்கப்படும். அதன் மூலம் பாதுகாப்பு படைக்கரம் பலப்படுத்தப்படும் என்று இந்திய உள்துறை மந்திரி சிவராஜ்பட்டேல் கூறினார். டில்லியில் உள்துறை மந்திரி சிவராஜ் பட்டேல் நிருபர்களிடம் கூறியதாவது,

காஷ்மீர், அசாம் ஆகிய பகுதிகளில் தீவிரவாதி களைப்பிடிக்க பாதுகாப்புப்படை மற்றும் பொலிசாருக்கு போர்விமானப் பாதுகாப்பு தரப்படும். அதன் மூலம் பாதுகாப்பு படை மற்றும் பொலிசாரின் கை ஓங்கும்

பாதுகாப்பு படையினருக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்க ஆலோசித்து வருகிறோம். பாதுகாப்புப்படை மற்றும் பொலிசார் தீவிரவாதி களை எதிர்த்துப் போரிடும்போது காயம் அடைந்தால் அவர்களை மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்ல விமான வசதி செய்து தரப்படும் என்றார் அவர்.

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் மழைக்கால கூட்டத்தொடர்

அயோத்தி தாக்குதல், லண்டன் குண்டு வெடிப்புக்களின் எதிரொலி காரணமாக இந்திய பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் பலத்த பாதுகாப்புடன் நேற்று முன்தினம் தொடங்கியது.

முக்கிய தலைவர்கள் வரும் வாசலில் பொலிசார் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். அதிநவீன கண்காணிப்புச் சாதனங்கள் பாராளுமன்ற வளாகத்தில் பொருத்தப்பட்டிருக்கிறன. இதனிடையே நேற்று முன்தினம் தெற்கு டில்லிப் பகுதியில் பொலிசார் தீவிரவாதிகளைக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதற்கிடையில் கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது தொடர்பாக சபாநாயகா சோம்நாத் சட்டர்ஜி அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.



இந்திய பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இதனையொட்டி பாராளுமன்ற வளாகத்தில் துப்பாக்கி ஏந்திய பொலிசார்பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ளதைக்காணலாம்.

# எட்டுத் தீவிரவாதிகள் காஷ்மீரில் பலி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலத்தில் பல்வேறு சம்பவங்களில் எட்டுத் தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளன

காஷ்மீர் மாநிலம் பூ[illegible] வட்டத்தில் ல[illegible] கர்-இ-தொய்பா இயக்க தீவிரவாதிகள் மூன்று பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து மூன்று ஏ.கே. 47ரக துப்பாக்கிகள், வெடி குண்டுகள் தொலைத் தொடர்புக் கருவிகள் கைப்பற்றப் பட்டன.

அனந்த்நாக் மாவட்டத்தில் மேலும் இரண்டு தீவிரவாதிகளைப் பாதுகாப்புப்படையினர் சுட்டுக் கொன்[illegible] மேலும் இங்கு சிறையிலிருந்து [illegible]லையான தீவிரவாதி முஷ்டாக் அகமது என்பவரை தீவிரவாதிகளே சுட்டுக்கொன்றுள்ளனர். அஜர்-பந்த் போரா பகுதியில் ஒரு வெளிநாட்டுக்காரர் உட்பட இரு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

# குண்டு வெடிப்புக்களில் 4 சிறுவர்கள் காயம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் இடம்பெற்ற இரு வேறு குண்டு வெடிப்புக்களில் நான்கு சிறுவர்கள் காயமடைந்துள்ளனர். காஷ்மீர் மாநிலம் பாரமுல்லா மாவட்டத்தில்ஆஜர்-பந்திபோரா என்ற இடத்தில் குண்டு வெடித்ததில் மூன்று குழந்தைகள் காயமடைந்தனர். அதில் ஒரு குழந்தையின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. குண்டு என்று தெரியாமல் அதைக் கையில் எடுத்து விளையாடியபோதே அது வெடித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

குப்வாரா மாவட்டத்தில் உள்ள குதர் காட்டுப் பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டு இருந்த சிறுவன் முகமது அல்யாஸ் கண்ணி வெடியில் சிக்கி காயமடைந்தான். தீவிரவாதிகள் ஊடுருவலைத்தடுக்க பாதுகாப்புப் படையினர் இந்தக் கண்ணிவெடியைப் புதைத்து வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.


## உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு, கிழக்கு மாகாணசபை.

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல.1846-SRI(SF)

# கேள்வி கோரல்-இல.07

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD ஆகுசெலவு சார்பாக பல தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலை களுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NEORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக் காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/ NECORDExt/ED/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் கஷ்ட பிரதேசத்தில் (உடையார்கட்டு) ஆசிரியர்களுக்கான கூட்டு விடுதி அமைத்தல் | M6 | 57,750 |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர் களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

i நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD டுடன் மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

iii கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது 01.07.2003இற்குப் பின் பதிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரர் திருப்திகரமான ஒத்ததன்மையினால் வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ, அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ செய்திருத்தல் வேண்டும். முழு வேலைகளும் வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

iv "ICTAD"வழிகாட்டல்முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

v மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடத்தின் கீழ் விளங்கக் கூடாது.

vi ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04 மேற்குறிப்பிட்ட அட்டவணையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD, வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003 இற்குப் பின் பதிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ முடித்திருந்தால் எந்தவொரு நேரத்திலும் ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு NECORD திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக் கூடதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.

05 தகுதி வாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

06 ஒப்பந்த ஆவணங்களை 2005 ஓகஸ்ட் 01ஆம் திகதியிலிருந்து 2005 ஓகஸ்ட் 10 திகதி வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்தி பெற்று கொள்ளலாம்.

07 முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் முல்லைத்தீவு NECORD, அலுவலகத்தில் 2005 ஓகஸ்ட் 12 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

08 கேள்வி முன்தகுதிதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அது 9 ஆம் பந்தியில் குறிப்பிட்ட திகதியில், இடத்தில் விநியோகிக்கப்படல் வேண்டும்.

09 அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேற்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2005 ஓகஸ்ட் 16 முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவு களுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

**திருமதி. இமெல்டா சுகுமார்,**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை/ அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி.12452)

## சாதனைகளை இலக்குவைத்து விக்கெட்டுக்களை வீழ்த்துவதில்லை




சாதனைகளை இலக்கு வைத்து தாம் விக்கெட்டுக்களை வீழ்த்துவது கிடையாது என சிறிலங்கா கிரிக்கெட் அணியின நட்சத்திர பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியதீவுகளுடனான போட்டியில் 46 ஓட்டங்களுக்கு எட்டு விக்கெட்டுக்களை சாய்த்த முரளிதரன் இதுவரை 549 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். அவுஸ்திரேலிய அணியின் ஷேன் வோர்ன் 589 விக்கெட்டுக்களை பெற்றுள்ளார். அவர் தொடர்ந்து கூறும்போது; ஷேன் வோர்னின் இந்த இலக்கை அடைவது தனது நோக்கமல்லஎன்றும் சிறிலங்கா கிரிக்கெட்டுக்காக கூடியவரை உணர்வுடன் செயற்பட்டு விக்கெட்டுக்களை வீழ்த்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## துடுப்பாட்டத்தை மெருகூட்ட மைக்கல் வோகன் திட்டம்



ஆஷஸ் கிண்ண முதலாவது டெஸ்ட் போட்டியில் தனது துடுப்பாட்டத்திறமை வெளிப்படாததால் யோக்ஷயர் அணிக்காக ஆடி பயிற்சி பெறுவதைவிட பயிற்றுநர் டங்கன் பிளச்சரிடம் தனியாக பயிற்சியெடுப்பது நல்லது என இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார். ஆயினும் மெக்ராத், வோன் ஆகியோரின் பந்து வீச்சில் மூன்று அல்லது நான்கு ஓட்டங்களில் ஆட்டமிழப்பதால் தனது திறமை குறைந்து விடவில்லை எனக் குறிப்பிட்டுள்ள வோன் லோட்ஸ் டெஸ்ட்டில் சாதகமான நிலைகாணப்பட்ட போதும் தனது அணி கடுமையாக உழைக்கவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர் வரும் ஓகஸ்ட் நான்காம் திகதி என்பவரில் நடைபெறும். அதற்கு முன்பாக வரும் சனியன்று நடைபெறும் இருபது ஓவர் ஒருநாள் கவுண்டி போட்டிகளில் ரெஸ்கொதிக். பிளின்டொப் ஆகியோர் பங்கெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் ஹார்மிசன், ஜோன்ஸ் ஆகியோருக்கு பூரண ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

## கங்குலியின் தடைமீதான விசாரணை மீண்டும் ஆரம்பம்



கங்குலிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு கோரி இரண்டாவது முறையாக செய்யப்பட்ட மனுமீதான விசாரணையை இந்தியா ஆரம்பிக்கவுள்ளது.

பாகிஸ்தானுடனான போட்டியில் தாமதமாக பந்துவீசியதற்காக அவருக்கு சர்வதேச கிரிக்கெட் சபை ஆறு ஒருநாள் போட்டிகளில் விளையாடதடைவிதிக்கப்பட்டது. தெரிந்ததே. எனினும் சிறிலங்காவில் நடைபெறவுள்ள முக்கோணப்போட்டிகளில் அவரை இணைத்துக்கொள்ள கிரிக்கெட்சபை முயன்று வருகிறது. எனினும் அணித் தலைவராக ராகுல்ராவிட்டே பணியாற்றுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.




## மேற்கிந்தியத்தீவு பந்து வீச்சாளர் பெஸ்ட்டுக்கு அபராதம்



சிறிலங்கா அணியுடனான அண்மைய டெஸ்ட் போட்டியின் போது மேற்கிந்தியத்தீவு அணியின் பந்து வீச்சாளர் டினோபெஸ்ட் முறையற்ற முறையில் பந்து வீசினார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு அப்போட்டியின் ஊதியத்தில் 50 வீதத்தை அபராதமாக செலுத்துமாறு சர்வதேச கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது. அவர்இரண்டாவது போட்டியின் முதலாவது இன்னிங்சில் மூன்று நாட்களும் தொடர்ந்து பீமர் முறையில் பந்தை வீசினார். என்ற குற்றச்சாட்டில் பந்து வீசுவதிலிருந்து தடுக்கப்பட்டார். பெஸ்ட் கண்டி டெஸ்ட்டில் மூன்று விக்கெட்டுக்களை வீத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆம்ஸ்ரோங்கை சிறந்த வீரராக கருதமுடியாது முன்னாள் வீரர்கள்



அண்மையில் டுவர்டி பிரான்ஸ் துவிச்சக்கரவண்டி ஓட்டப்பந்தயத்தில் ஏழாவது தடவையாகவும் பட்டம் வென்ற லான்ஸ் ஆம்ஸ்ரோங்கை நிச்சயமான ஒரு சிறந்த வீரராகக் கருத முடியாது என முன்னாள் சாதனை வீரர்களான மிகுவெல் இந்துரேனும், பெனாட் ஹினோல்ட்டும் தெரிவித்துள்ளனர். தமது சாதனையை அவர் முறியடித்த போதும் அவர் பாவிக்கும் துவிச்சக்கரவண்டியையும், தமது வண்டியையும் ஒப்பிட முடியாது என அவர்கள் கூறியுள்ளனர். அவர் தனது பரம்பரையில் திறமானவராக இருப்பினும் மற்றவர்களுடன் அவரை ஒப்பிடமுடியாது என இந்துரேன் தெரிவிக்கிறார். அத்துடன் இன்னும் பல பிரபல வீரர்கள் கலந்துகொள்ளும் போட்டிகள் நடைபெறவிருப்பதால் அதிலும் வெற்றி பெறுவோர் இருக்கலாம் என்றும் அவரின் சாதனையும் முறியடிக்கப்படலாம் என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## வோர்ன்மீது மனைவி கடும் கோபம்

அவுஸ்திரேலியவீரர் வோர்ன் பிரிந்து சென்ற தனதுமனைவியிடம் மன்னிப்புக்கோரியபோதும், மீது மனைவி சிமோன் கடும் கோபம் அடைந்துள்ளார். அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி பந்துவீச்சாளரான வோர்ன் தொடர்ந்து பாலியல் புகார்களுக்கு ஆளாகிவருகிறார். இதுவரை அவர் மீது ஐந்து பெண்கள் அடுத்தடுத்து குற்றம் சாட்டியுள்ளனர். சமீபத்தில் ரெபக்சா எனும் 20 வயது மாணவியை அவர் பாலியல் தொந்தரவு செய்ததாக புகார் எழுந்தது.

இப்படி தொடர்ந்து வோர்ன் குற்றச்சாட்டுக்கு ஆளாகி வருவதால் அவருடைய மனைவி சிமோன் போரைவிட்டுப் பிரிந்து செல்வதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் நியூசிலாந்து அணி சிம்பாப்வே பயணம்

பல்வேறு எதிர்ப்புகளுக்கு பின்னர் இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் ஆடுவதற்காக நியூசிலாந்து அணி சிம்பாப்வே சென்றுள்ளது.

சிம்பாப்வேயில் அதிபர் ராபர்ட் முகபேயின் ஆட்சியில் மனித உரிமைகள் மீறப்படுகிறது என்று கூறி நியூசிலாந்து அங்கு செல்லக்கூடாது என்ற எதிர்ப்பு கிளம்பியது. சிறிய அளவில் கிளம்பிய எதிர்ப்பு போகப்போக பூதாகரம் எடுக்கத்தொடங்கியது. இதனால் நியூசிலாந்து அணி சிம்பாப்வேக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில் பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையே நியூசிலாந்து அணி, சிம்பாப்வே செனறுள்ளது. இவ்விருஅணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஓகஸ்ட் ஏழாம் திகதி முதல் 11ஆம் திகதிவரை ஹராரேயில் நடக்கிறது. இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஓகஸ்ட் 15ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை புலவாயோவிலும் நடக்கிறது. டெஸ்ட் போட்டித்தொடரிற்கு முன்னதாக பயிற்சி ஆட்டம் ஒன்று நடக்கிறது. இந்த போட்டி ஓகஸ்ட் நான்காம் திகதி ஹராரேயில் தொடங்குகிறது.

## கூடைப்பந்து போட்டியில் இன்று நடைபெறும் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை, தமிழீழ மாணவர் அமைப்பு அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்திவருகின்றது. இந்தச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பற்றிசீயன்ஸ் விளையாட்டுக் கழகம்,எதிர்கோப்பாய் விளையாட்டுக்கழகமும் மாலை நடைபெறவுள்ள ஆட்டத்தில் (பெண்கள் அணிகள்) யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கீ)

## கரைச்சிப்பிரதேச மெய்வன்மைப் போட்டி

கரைச்சிப்பிரதேச செயலகப் பிரிவில்பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான 2005ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப்போட்டி நேற்று கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது. மேற்படி போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் இன்றைய தினம் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டிருந்த பொழுதிலும் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை நடைபெற்று வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலக விளையாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். மேற்படி போட்டிக்கு பிரதம விருந்தினராக உதவி அரச அதிபர் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த செல்வி.ஜெயராணி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி. க.சுலோஜினி கலந்து கொள்கின்றார். (சோ)

## வெலிக்கடைசிறை படுகொலை நினைவான கால்பந்த போட்டியில் மனோரா அணி வெற்றி

1983 ஆம் ஆண்டு யூலைமாதம் வெலிக்கடைச்சிறையில் சிங்கள பேரினவாதிகளால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட தாமு.கந்தையா உள்ளிட்ட புத்தூர் கிழக்கு மாவீரர்கள் ஞபகார்த்தமாக புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் தமிழீழ விளையாட்டுத்துறை யாழ். உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கழகமைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம், புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோரா விளையாட்டுக் கழகமும் நவர்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழக அணியும் மோதின. போட்டி ஆரம்பமாகி ஐந்தாவது நிமிடத்தில் எல்லாளன் அணிவீரர் ஒரு கோலைப் போட்டதும் ஆட்டம் விறுவிறுப்படையத் தொடங்கியது. தொடந்து ஆட்டத்தின்18 ஆவது நிமிடத்தில் மனோரா அணியும் ஒரு கோலைப்போட இரு அணிவீரர்களும் கோல் பெறுவதற்காக பலமுயற்சிகளை மேற்கொண்டனர் ஆட்டம் சூடுபிடிக்கத்தொடங்கியது. எல்லாளர் அணியினர் மீண்டும் ஒருகோலை 24 ஆவது நிமிடத்தில் அடிக்க மனோரா அணியின் முன்னிலை ஆட்டக்காரர்கள் கோல் பெறுவதற்கு பலமுறை முயற்சித்தபேதும் கோல் பெறாத நிலையில் முதல்பாதி ஆட்டம் 2-1என்றகோல் கணக்கில் முடிவடைய இரண்டாம் பாதியாட்டம்

தொடங்கி 37ஆவது நிமிடத்தில் மனோரா அணி மீண்டும் ஒருகோலை அடித்து ஆட்டத்தை சமநிலைக்கு கொண்டுவர ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இரு அணிவீரர்களும் கோலைப் பெறுவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதும் ஆட்டத்தின் 49 ஆவது நிமிடத்தில் மனோரா அணி மீண்டும் ஒரு கோலை அடித்து தனது வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்டது. இருந்த போதிலும் எல்லாளன் அணிமுன்னிலை வீரர்கள் கோல் பெறுவதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் மனோரா அணியின் பின்காப்பு வீரர்களின் நேர்த்தியான செயற்பாட்டினால் கோல்பெறும் வாய்ப்பை இழந்தனர். ஆட்டநேரமுடிவில் 3-2 என்ற கோல் கணக்கில் மனோரா அணி வெற்றிபெற்றது.

மாலை 4.30 மணிக்கு நடைபெறவிருந்த போட்டிக்கு கொற்றவத்தை சிவானந்தா அணி போட்டிக்கு சமுகம் கொடுக்காத காரணத்தால் விக்னேஸ்வரா அணி நேரடியாக அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (கீ)

## கிளி-மாவட்ட விளையாட்டுப் போட்டி-2005

கிளிநொச்சி மாவட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2005 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 31 ஆம், முதலாம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் கனகராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் மேற்படி போட்டிக்கு பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் வேதநாயகம் சிறப்பு விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## மாவட்ட போட்டி சம்பந்தமான கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மறுதினம் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக கண்டா வளை பிரதேசவிளையாட்டு உத்தியோகத்தர் க.புவனேந்திரராஜா அறிவித்துள்ளார்.

பிரதேச செயலர் சத்தியசீலன் தலைமையில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தில் அழைக்கப்பட்ட கழகங்களை தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மாணவன் புதிய சாதனை



வடக்கு-கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.மாகாண மட்டப் போட்டிகள் கடந்த 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை வவுனியா பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் கலந்து கொண்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் கிருபானந்தன்-அகிலகிரி (21 வயதுக்குட்பட்ட பிரிவில்) என்பவர் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் 400 மீற்றரை 0.59.96 செக்கனில் ஓடிமுடித்துள்ளார்.இதேவேளை 2004ஆம் ஆண்டு அம்பாறை மாணவன் நிகழ்த்திய சாதனையை (1.01செக்கன்) புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் அகிலகிரி முறியடித்து சாதனையை நிகழ்த்தி புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரிக்கு பெருமையைத் தேடிக்கொடுத்துள்ளார். இவர் 200 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

(08)

## சிந்தனைக்கு



எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27.07.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## "அப்பன் குதிருக்குள் இல்லை"

சனாதிபதி சந்திரிகா " எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை" என்பது போன்று பேசுவது சிறுபிள்ளைத்தனமானது. இத்தகைய பேச்சு அவர் தன்னையே கேவலப்படுத்துவதாகிவிடும். ஏனெனில், நடைபெறும் சம்பவங்கள் சனாதிபதியின் பேச்சிற்கு முற்றிலும் மாறானவையாகவே உள்ளன.

தமிழ் துணை இராணுவக் குழுக்கள்-தமிழ் இனவிரோதக் குழுக்கள்-விடயத்தில் அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளுக்கு ஏற்ப நடந்துகொள்ளவில்லை என்பது ஏற்கனவே தெரிந்ததொன்று. அதாவது உடன்பாட்டின்படி தமிழ் இனவிரோதக் குழுக்களின் ஆயுதங்களைக் களையவோ, அவர்களை வடக்கு-கிழக்கிற்கு வெளியில் கொண்டு செல்லவோ அரசாங்கம் முயற்சிக்கவில்லை.

யுத்தநிறுத்தம் அமுலில் இருப்பினும் சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான மறைமுகப்போர் ஒன்றை நடத்துவதில் முனைப்புக் காட்டியே வந்தது. இதற்கெனத் தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தி வந்த அரசாங்கம், சில சமயங்களில் தமிழ்க் குழுக்களின் பெயரில் புலிகள் மீது தாக்குதலை நடத்தியதும் உண்டு.

அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் நோக்கில் கருணாவிற்கு முழுஅளவில் ஊக்கமும், ஒத்தாசையும் வழங்கியது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இக்குழுவின் பெயரிலேயே அண்மைய தாக்குதல்களைச் சிறிலங்கா புலனாய்வுத்துறை மேற்கொண்டிருந்தது.

இவ்விடயமானது ரகசியமானதல்ல. சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பே கருணாகுழுவொன்று செயற்படுவதாக அடிக்கடி ஞாபகமூட்டிக் கொண்டிருந்தது. அத்தோடு, இக்குழுவின் பெயரில் நடந்த தாக்குதல்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடைபெற்று வந்தமையால் இக்குழு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இயங்குகின்றது என்பதை இராணுவமே உறுதியும் செய்தது.

ஆனால் கருணாகுழு தமது பாதுகாப்பில் இல்லை என்பதும் தமக்கும், அதற்கும் தொடர்பில்லை என்பதும் எவராலுமே ஏற்றுக்கொள்ளத்தக்கதும் இல்லை. அதற்கான வாய்ப்பும் இல்லை. ஏனெனில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிறிலங்கா படைத்தரப்பின் பாதுகாப்பானது உச்ச நிலையில் வைக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. இதேவேளை கருணாதரப்பும் இராணுவத்துடன் கண்ணாம்பூச்சி ஆடும் அளவிற்கு திறன் வாய்ந்ததும் இல்லை.

இதனை உலகமும் ஓரளவு புரிந்துகொண்டேயுள்ளது. இதன் வெளிப்பாடே அண்மையில் தமிழ் துணை இராணுவப் படைகளின் ஆயுதங்களைக் களைதல் வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கை ஆகும். ஆனால் இது தனியாக அமெரிக்காவின் கோரிக்கையல்ல. அமெரிக்காவுடன் இணைந்ததான ஐரோப்பிய யூனியன், ஜப்பான், நோர்வே போன்ற சிறிலங்காவிற்கு உதவும் பல நாடுகளின் இணைத்தலைமையின் கோரிக்கையேயாகும்.

இத்தகையதொரு நிலையில் சனாதிபதி சந்திரிகா வடக்கு-கிழக்கில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்கள் எதுவுமே இல்லை எனக் கூறுவது ஒரு புறத்தில் நகைப்பிற்குரியதாகவும், மறுபுறத்தில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பையே சிக்கலுக்குள் மாட்டிவிடுவதாக அன்றி சிறிலங்கா புலனாய்வு மற்றும் இராணுவத்தரப்பை அவமானப்படுத்துவது போன்றதாகவும் உள்ளது.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழு எதுவும் இல்லையெனில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு சிறிலங்கா இராணுவத்தரப்பே நேரடியாய் பொறுப்பேற்கவேண்டியிருக்கும். ஏனெனில் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்கள் முழு அளவிலான இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே நிகழ்கின்றன.

அவ்வாறு இல்லாது சிறிலங்கா அரசு கூறுவது போன்று இனம் தெரியாதவர்களினால் புலிகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப் படுகின்றது எனின் அவர்களைக் கண்டு பிடிக்கும் திறன் சிறிலங்கா புலனாய்வுத் துறைக்கும், இராணுவத்திற்கும் இல்லையா? அந்தளவிற்குப் பலமற்ற, திறனற்ற நிலையிலான சிறிலங்காப் படைத்தரப்பு உள்ளது என்ற கேள்வி எழும்?

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா உலகம் அறிந்ததொரு உண்மையை மூடி மறைக்க முயன்று தன்னையும், தமது ஆயுதப் படைத்தரப்பையும் கேவலப்படுத்தாமல் இருப்பது அவர் மீதான நம்பகத்தனத்தையாவது தேடித்தருவதாக இருக்கும். அவ்வாறு இல்லாது பொய்யையே அவர் பேசுவதாக இருந்தால் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறாகவும், சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் செயற்படுவதாகவே அர்த்தம் கொள்ள முடியும்.

## தேர்தல் ஆணையாளர் அரசியல் வாதியல்ல, அதிகாரி

# தேர்தல் குறித்த அறிவித்தலை அரசியல் யாப்பின்படி விடுக்க வேண்டும்

### ஐ.தே. கட்சி பா. உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டிலா அல்லது 2006 ஆம் ஆண்டிலா நடைபெற வேண்டும் என்பது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் உடடியான அறிவிப்பை விடுக்க வேண்டும் என்பதில் நியாயம் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் இது தொடர்பில் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைக்கும் போது;

தேர்தல் ஆணையாளரைப் பொறுத்தவரையில் அவர் அரசியல் வாதியல்ல. அவர் ஒரு அரசாங்க அதிகாரி. எனவே உரியகாலத்தில் தேர்தல் தொடர்பான அறிவித்தலை விடுக்கவேண்டியதே அவருக்கு அரசியல் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரமாகும்.

இதற்காக அவர் யாரிடமும் ஆலோசனையைப் பெறலாம். எனினும் முடிவை அவர் சுயாதீனமாகவே மேற்கொள்ள வேண்டும் என ஜி. எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.இந்தநிலையில் சனாதிபதித் தேர்தல் தொடர்பில் சனாதிபதி பலநடைமுறைக் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.அவருக்கு அந்த கருத்துக்களைக் கூற எவ்வித அதிகாரமும் இல்லை.

சனாதிபதியின் கருத்தின்படி எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு பொதுத்தேர்தலும் நடத்தப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு அரசாங்க நிர்வாகத்தைக் கொண்டு செல்ல தமது அரசாங்கத்துக்கு பலம் இருக்கிறது என சனாதிபதி கூறிவருகிறார். ஆனால் நடைமுறை அரசாங்கத்துக்கு ஐந்து ஆண்டுகள் அல்ல, ஐந்து வாரங்கள் கூட அரசாங்கத்தை கொண்டு செல்ல பலம் இல்லை என்பதை மக்கள் அனைவரும் அறிவர் என ஜீ.எல் பீரிஸ் குறிப்பிட்டார்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தின் போது அரசாங்கத்திற்கு அதனை நிறைவேற்றமுடியாமல் போனால் நிச்சயமாக அரசாங்கம் பதவி விலகநேரிடும் என அவர் குறிப்பிட்டார்.

சனாதிபதி டோக்கியோ பிரகடனத்தின் சமதலைமை நாடுகளை அழைத்து போர் நிறுத்தத்தின் நடைமுறையை அவர்களுக்கே விளக்கும் வகையில் கருத்துக்களை தெரிவித்துள்ளார். எனினும் 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் அவர் குறிப்பிட்ட நாடுகள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக தெரிவித்து அவற்றை விமர்சனம் செய்திருந்தார். இது அவருடைய அரசாங்கத்தில் கொள்கை எதுவும் இல்லை என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளதாக ஜீ.எல் பீரிஸ் குறிப்பிட்டார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் சமர்பித்துள்ள தனிநபர் பிரேரணை தொடர்பில் கருத்துரைத்த ஜி.எல்.பீரிஸ், சனாதிபதியை தெரிவு செய்யும் முறையை மக்களிடம் இருந்து பெற்று பாராளுமன்றத்திற்கு கொடுப்பதற்கு ஏன் தற்போதைய நிலையில் அவசரம் எனக் கேள்வி எழுப்பினார்.இந்தத் தனிநபர் பிரேரணைக்கு அரசாங்கத்தரப்பிலும் கூட ஆதரவில்லை எனத் தெரிவித்த அவர், சனாதிபதித் தேர்தலை மேலும் ஒரு வருடத்திற்கு காலம் தாழ்த்துவதே அதன் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கும் அரசாங்கம் ஏன் முன்னர் பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட தினேஸ் குணவர்த்தன குழுவின் பரிந்துரைகளை பரிசீலிக்கக்கூடாது என்றும் ஜீ.எல். பீரிஸ் வினவினார். (32)

# கல்கமுவ வாவியில் 253 ரி-56 தோட்டாக்கள்

கல்கமுவ கொப்ராகமுவ வாவியிலிருந்து தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கல்கமுவ கொப்ராகமுவ வாவியில் தோட்டாக்கள் இருப்பதாக சிறிலங்காப் பொலிசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அந்த வாவியில் சோதனை நடத்தப்பட்டபோது அலுமினியப் பெட்டி ஒன்று கண்பிடிக்கப்பட்டது. அதிலிருந்து ரி-56 தோட்டாக்கள் 253 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இராணுவ முகாமிலிருந்து இந்தத் தோட்டக்கள் திருடப்பட்டு இங்கு கொண்டு வந்து போடப்பட்டிருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர். இந்நிலையில் கலேவெல தேவஹீவ நீர்த்தேக்கத்திலிருந்தும் மூன்று குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த நீர்த்தேக்கத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களின் வலையில் சிக்கிய பொலித்தீன்பை ஒன்றில் இந்த மூன்று குண்டுகளும் இருந்துள்ளன. குண்டுகளில் க்றீஸ் தடவப்பட்டு அவை பொலித்தீன் பையொன்றினுள் போடப்பட்டிருந்தன. குண்டுகளைக் கைப்பற்றிய பொலிசார் அவற்றைச் செயலிழக்கச் செய்தனர். இது குறித்தும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பிரதி அமைச்சர் மேவின்சில்வாவின் மகன் பொலிசாருக்கு இடையூறு ஏற்படுத்தவில்லை

### - பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

பிரதிஅமைச்சர் மேவின் சில்வாவின் மகன் தொடர்பிலான பிரச்சினை பொலிசாரின் பணிகளில் இடையூறு விளைவிக்கும் வகையில் அமையவில்லை என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொலிஸ்துறை தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர், போதைவஸ்து தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் தமது கடமை முடித்து சென்ற போதே பிரதி அமைச்சரின் மகன் மற்றும் அமைசசுப் பாதுகாப்பு பிரிவினருடன் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அங்கு அவர்களின் பணிகளுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படவில்லை. இதன் காரணமாக அதனை பாரிய விடயமாக எடுக்கவேண்டிய அவசியம் இல்லை எனப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

கொழும்பின் சுமார் 11 விருந்தகங்களில் எக்ஸ்டசி என்ற போதைபொருள் பாவனை, விநியோகமும் நடைபெறுவதாக பொலிசருக்கு தகவல் கிடைத்துள்ளது. அண்மையில் ரோயல் பார்க் விருந்தகத்தில் இளைஞர் குழு ஒன்று இந்தப் போதைப்பொருளை பயன்படுத்திச்சென்றுள்ளமை தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த பொலிஸ் மா அதிபர் இது தொடர்பிலான தேடுதலின் நிமித்தமே கடந்த ஞாயிற்றுக்கிழமை போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் விருந்தகம் ஒன்றிற்கு சென்றதாக கூறினார்.(32)

# ஊடகங்களைத் தூசித்த மேவின் சில்வாவிற்கெதிராக கொழும்பில் ஊடகவியலாளர் இன்று ஆர்ப்பாட்டம்

பிரதி அமைச்சர் மேவின் சில்வா நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு விடுத்த எச்சரிக்கை மற்றும் ஊடகங்களை ,தூசித்தமைக்கு எதிராக இன்று எதிர்ப்புணர்வு ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை தொடருந்து மையத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நண்பகல் 12.30 மணிக்கு நடத்தப்படவுள்ளதாக சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். இந்த போராட்டத்தில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் முஸ்லிம் ஊடக அமைப்பு என்பன உட்பட ஐந்து அமைப்புகள் இணைந்து கொள்ளவுள்ளன. எனவே சுதந்திர ஊடகத்துறைக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைவரும் இதில் பங்கேற்குமாறு சுனந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.(32)

# அல்பிட்டியவில் ஆயுதங்களுடன் கொள்ளைக் கும்பல் கைது

அல்பிட்டிய பகுதியில் ஆயுதங்களுடன் கொள்ளைக் கும்பல் ஒன்று கைது செய்யப்பட்டுள்ளது.

அல்பிட்டியவில் கைது செய்யப்பட்ட சந்தேகக நபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பெறப்பட்ட தகவல்களையடுத்து பல கொள்ளை, கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய எட்டுக் கொள்ளைக்காரர்கள், பத்து துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கொள்ளையர்கள் தங்கல்லை, அல்பிட்டிய, மாத்தறை, மினுவன்கொடை, ஊறுபொக்கை, கம்புறுப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனச் சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர்.

# சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட தங்கநகை பிடிபட்டது

(கொழும்பு)

சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட தங்க ஆபரணங்கள் கட்டுநாயக்கா வானூர்தித் தளத்தில் கைப்பற்றப்பட்டன. நேற்று அதிகாலை கொங்கொங்கில் இருந்து வந்து கொழும்பில் வசிக்கும் இலங்கைத் தம்பதியினரிடம் இருந்தே இவை கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்களுடைய உடலிலும் பயணப் பொதிகளிலும் மிகவும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டு இருந்த இந்த ஆபரணங்களின் பெறுமதி 15 இலட்சரூபாவுக்கும் அதிகம் எனச் சுங்கத் துறை தெரிவிக்கின்றது. இந்த ஆபரணங்கள் அரசுடமையாக்கப் பட்டதோடு கைது செய்யப்பட்டவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (32)

## வடக்கு..

டியுள்ளார்.

இதன்போது பொதுக்கட்டமைப்பினால் கரையோரப் பகுதியில் கடற்புலிகளின் பலம் அதிகரித்து விடாது எனத் தெரிவித்த அவர், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும் என ஏற்பட்டுள்ள சர்வதேச அழுத்தம் குறித்தும் கருத்து வெளியிட்டதாகத் தெரியவருகிறது.

இச்சந்திப்புக்காக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் அமைந்துள்ள பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்குள் செய்தியாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இச்சந்திப்பின் பின்னர் படைத் தளபதிகளிடையே சந்திப்பு ஒன்று நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.(32)

## சனாதிபதித்தே[illegible]..

விக்கப்படுகிறது.

அதேவேளை பிரதமராக அனுரா பண்டாரநாயக்கவை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மகிந்தராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலின் போது பிரதமர் பதவியிலிருந்தவாறே போட்டியிடுவதா? அல்லது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு அவ்விடத்திற்கு அநுராவை நியமித்தபின் சனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதா? என்பது குறித்தும் நேற்றிரவு ஆராயப்பட்டது.

மேலும் சனாதிபதித் தேர்தலின் போது ஜே.வி.பி யின் ஆதரவுடன் போட்டியிடுவதை சனாதிபதி சந்திரிகா விரும்பவில்லை எனவும் ஆனால் ஐ.தே.க வை தோற்கடிக்க ஜே.வி.பியுடன் இணைந்து போட்டியிடுவது அவசியம் எனச் சிலர் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## களுத்துறை...

இதனையடுத்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டு அங்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளார். (32)

## வவுனியாவில்....

இந்த வாகனத்தை வாடகைக்கு அமர்த்திச்சென்றவர்களே இந்தக் கொலைகளை மேற்கொண்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. சுமார் 17 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த வாகனத்தின் உரிமையாளர் நேற்று மாலை வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்தமையை அடுத்தே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை கொலைக்கு பின்னர் வாடகைக்கு அமர்த்தப்பட்ட குறித்த டொல்பின்வான் கொலையாளிகளால் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சனாதிபதி....

தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

இதுதவிர சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டிய காலம் சம்பந்தமாக மக்களுக்கு அறிவூட்டும் வகையில் பிரதேச மட்டத்தில் 5,000 கூட்டங்களை நடத்தவும் பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

## வீதி ஒழுங்கு குறித்து கலந்துரையாடல்

மன்னார் கறுக்காய்குளத்தில் அமைந்துள்ள ஆயப்பகுதி சோதனை நிலையத்தில் வீதிஒழுங்கு குறித்து பணியாளருக்கான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இதில் தமிழீழ காவல்துறையின் நகரப்போக்குவரத்துப் பிரிவுப்பொறுப்பாளர் சிவகுமாரன் கலந்துகொண்டு வீதி ஒழுங்குவிதிகள் தொடர்பாக கருத்துரை வழங்கினார். இக்கருத்தூட்டல் நிகழ்வில் 100 பணியாளர்கள் கலந்துகொண்டனர். (தீ)

## அரசியலமைப்பு

இந்த நியமனங்களை மேற்கொள்ள வேண்டியது சனாதிபதியின் கடமையாக இருந்தபோதும் அதற்கு ஏனைய கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(32)

## தமிழரை..

திற்கான கட்டுமானங்களைக் கட்டியெழுப்பி மிக வெற்றிகரமாகவும், சிறப்பான முறையிலும் அந்த நிர்வாக கட்டமைப்புக்கள் இங்கே செயற்பட்டுக்கொண்டு வருவது தான் எல்லோரும் வியப்பாகப் பார்ப்பதற்குக் காரணமாகும் அண்மைக்காலத்திலே பேச்சுவார்த்தை முயற்சிக்கான ஒரு சூழல் ஏற்பட்ட நிலையிலே தான் எமது தேசத்திற்கான சர்வதேச சமூகத்தின் பிரசன்னம் பெரியளவிலே உருவானது. அந்த நிலையில் எல்லோருமே எமது போராட்டத்தை வியர்ந்து பார்க்கின்ற-வியப்பாக இங்குள்ள நிலைமைகளை ஆய்வு செய்கின்ற ஒரு சூழலை நாங்கள் பார்த்தோம். உண்மையிலேயே எங்களுடைய விடுதலைப்போராட்டம் எங்களுடைய மண்ணை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கின்ற அதே காலத்தில் விடுவிக்கப்பட்ட பிரதேசம் மீட்கப்பட்ட எங்களுடைய மக்களுக்கான சமூக ஒழுங்கை, கட்டுக்கோப்பை ஒழுங்கான முறையில் பேணி அதற்கான நிர்வாக இயந்திரங்களை, நிர்வாகக் கட்டமைப்புக்களை சிறப்பான முறையில் கட்டியெழுப்பி மிக சிறப்பான முறையில் அதை செயற்படுத்துகின்ற ஒரு தூரநோக்குக் கொண்ட சிறந்த வழிகாட்டலை எங்களுடைய தேசியத் தலைவர் இந்த மண்ணிலே நிறுவியிருக்கின்றார்.

எங்களுடைய விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் அதனைக் கட்டியெழுப்புவதிலும் அதிலும் அதை வெற்றிப் பாதையில் இட்டுச்செல்வதிலும் எங்களுடைய தலைவருக்கு முழு அளவில் துணை நிற்பது எங்களுடைய மக்கள். அதற்கு இன்றைய நிகழ்வு ஒரு முன்னுதாரணமானது என்றார்.

அரசியல்துறைப் பொறுப்பாளரின் நீண்டதொரு உரையில் சிறிலங்கா நீதித்துறை தமிழ்மக்களுக்கு விரோதமாக எவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் விபரித்தார்.

இதனையடுத்து பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சனாதிபதி சந்திரிகா நீதித்துறையைப் பயன்படுத்தி நடாத்தும் அரசியல் நாடகத்தைச் சுட்டிக்காட்டிய அரசியல் துறைப்பொறுப்பாளர் இம் மனிதாபிமானப் பிரச்சினையில் தமது அரசியல் முரண்பாடுகளையும் தீர்த்துக்கொள்வதற்கு பயன்படுத்திக் கொண்டமையையும் விபரித்தார்.

இதுகுறித்து அவர் குறிப்பிடுகையில்; தனது அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி போன்ற சிங்கள இனவாத அமைப்புக்கள் வெளியேறுகின்ற சூழலையும் வெளியேற்றப்படுகின்ற சூழலையும் உருவாக்கி தனக்கான ஒரு அதிகாரத்தளத்தைத் தக்க வைப்பதற்கே எங்களுடைய இந்த மனிதாபிமான பிரச்சினையை அவர் கையாண்டார். அது கூட ஒரு திட்டமிடப்பட்ட நாடகமாகத்தான் இந்தப் பொதுக்கட்டமைப்பு அரங்கேறியிருக்கின்றது. ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி இணக்கம் தெரிவித்து தமிழீழ விடுதலைப்புலிகளோடு இணக்கம் காணப்பட்ட ஒரு பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு சிறிலங்கா சனாதிபதியால் முடியாதிருக்கின்றது. அரசியல் அமைப்பிலே மிகத்தெளிவாக சட்டவரையறை கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது முழு அளவு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி தேசிய ஒற்றுமை கருதி அவரால் எடுக்கப்படுகின்ற முடிவுகள் எதையுமே எவரும் தடைசெய்ய முடியாதென்பது அரசியல் சட்டத்திலே தெளிவாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்தப் பொதுக்கட்டமைப்புக்கு சிறிலங்கா சனாதிபதி சர்வதேச சமூகத்தின் மிகக்கடுமையான அழுத்தம் காரணமாக ஒப்பமிட்டதும் தன்னுடைய அரசியல்தளத்தை பலப்படுத்திக் கொள்வதற்கு இப்படியான ஒரு முடிவை பகிரங்கப்படுத்தி தன்னுடைய அரசியலை அழித்துக்கொண்டிருக்கின்ற அந்த சக்திகளை வெளியேற்றுவதற்கொரு சந்தர்ப்பமாகவும் இதை பயன்படுத்தி ஒப்பமிட்டுவிட்டு இதை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் தனது கடந்தகால நிலைப்பாட்டையே அவர் வெளிக் காட்டினார். அந்த நிலையில் தான் இந்த மனிதாபிமான பிரச்சினைகூட முடக்கப்பட்டிருக்கின்றது. இது கூட சிறிலங்காவின் நீதித்துறையின் தீர்ப்பு இறுதியாக காட்டப்பட்டிருக்கின்றது.

இது வரைகாலமாக எங்கள் மக்கள் மீது ஒரு யுத்தத்தை தொடுத்துஎங்கள் பிரதேசங்களை ஆக்கிரமித்து எங்களுடைய மக்களை விரட்டியடித்து, எமது பிரதேசத்தை முழுமையாக அபகரித்து இந்த இலங்கைத்தீவை சிங்கள பௌத்த நாடாக்க முயன்ற சிங்கள அரசாங்கம் இந்த தமிழர்களின் இராணுவப்பலத்திற்கு முகம் கொடுக்க முடியாமல்தான் இப்பொழுது ஒரு உத்தியை கையாண்டு பேச்சுவார்த்தை சமாதானமென்று வந்து இந்த மூன்றரை வருடகாலமாக தமிழர்களின் தலைமையினுடைய நல்லெண்ண முயற்சிகள் அனைத்தையுமே சீர்குலைத்து இன்று ஒரு யுத்த நெருக்கடியை உருவாக்கியிருக்கின்றது. இன்று சர்வதேச சமூகம்கூட இங்கு நிலைமை மோசமடையுமானால் இலங்கைத் தீவிற்கு தம்மால் அளிக்கப்படும் உதவிகள் நிறுத்தப்படுமென்ற நிலைப்பாட்டை எடுக்கின்ற சூழலுக்குகூட கொண்டு வந்திருக்கின்றது.

இந்த நிலையில்தான் சந்திரிகா அம்மையார் சர்வதேச சமூகத்தை அழைத்து வடக்கு கிழக்கிலே நடக்கும் வன்முறைக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் தமக்கும் எந்தவித தொடர்புமில்லை என்று கூறியதாக பத்திரிகைகள், வானொலிகளினூடாக அறிகின்றோம். "முழுப் பூசணிக் காயை சோற்றிலே புதைப்பது" போன்ற பொய்யை சர்வதேச சமூகத்திற்கு கூறியிருக்கின்றார். சர்வதேச சமூகத்திற்கு இது தெரியும். யுத்தநிறுத்தத்திற்கு தலைமை தாங்கும் நோர்வே அனுசரணையாளரும் அதில் கலந்து கொண்டுள்ளார். நோர்வே நாட்டு கண்காணிப்புக்குழு உறுப்பினர்கூட எங்களிடம் நேரடியாக வந்து அந்த உண்மையை வெளிப்படுத்தியிருக்கின்றார். அதாவது கிழக்கிலே நடக்கின்ற இந்த வன்முறைகளுக்கு இந்த ஆயுதக்குழுக்கள்தான் காரணம். இக்குழுக்கள் இராணுவத்தினரின் அனுசரணையோடு இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள்தான் செயற்படுகிறது என்பதை நாங்கள் உறுதி செய்திருக்கின்றோம் என்ற உண்மையை அவர் எமக்கு தெரியப்படுத்தினார். ஆகவே சர்வதேச சமூகத்தின் முன்னால் பொய்யுரைப்பதில் இருவர் இந்த இலங்கைத் தீவில் முன்னிலை வகிக்கின்றார்கள். சந்திரிகா அம்மையாரும் கதிர்காமருமே அவர்கள். ஆகவே. சந்திரிகா அம்மையார் சர்வதேச சமூகத்தின் முன்கூறிய பொய்யினை சர்வதேச சமூகம் தெளிவாக புரிந்திருக்கும்.

ஏனெனில் இந்த இலங்கைத் தீவில் சமாதானத்தை கொண்டு வரவும் அபிவிருத்தி உதவிகளை செய்வதற்குமாக நான்கு அமைப்புக்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றது. ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நோர்வே இவர்களுடனேயே சனாதிபதி உரையாடியுள்ளார். அவர்கள் தான் அண்மையில் ஒரு காட்டமான அறிக்கையை விட்டிருக்கின்றார்கள். அதாவது சிறிலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கிலே செயற்படுகின்ற ஆயுதக்குழுக்களினுடைய ஆயுதங்களை களைந்து அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். முக்கியமாக விடுதலைப்புலிகளின் நிராயுதபாணிகளாக அரசியல் பணிகளில் பணிபுரியும் போராளிகளுக்கும், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பயணிக்கின்ற போராளிகளுக்கும் தகுந்த பாதுகாப்பளிக்க வேண்டுமென்ற ஒரு கடுமையான நிலைப்பாட்டை, தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய இன்றைய சிக்கல்களை அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். இதை முறியடிக்கும் முகமாகத்தான் இந்த நாடகத்தை ஆடியிருக்கின்றார்.

இன்றைய நிலையில் தமிழ் மக்களோ தமிழர்களுடைய தேசமோ ஏமாற்றப்பட முடியாத உறுதியான வளர்ச்சியை அடைந்திருக்கின்ற நிலையில் இவர்களின் ஏமாற்றும் நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை.

எனவே துன்பத்தை அனுபவிக்கின்ற இந்த தேசத்து மக்களுக்கு உதவி அளிக்கின்ற உறுதிப்பாட்டை நேரடியாக உதவுகின்ற அந்த உறுதிப்பாட்டை சர்வதேச சமூகம் நிச்சயமாக வெகுவிரைவில் எடுக்க வேண்டும். அதையே எங்களுடைய மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே இன்றைய சூழலில் எங்களுடைய மக்கள் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டியவர்களாக மக்களை சிங்கள பேரினவாதம் தள்ளியிருக்கின்றது. ஆகவே எமது மக்களின் உணர்வுகளின் அடிப்படையில் எமது தலைவர் தீர்க்கமான முடிவை எடுத்து எங்களுடைய தேசத்தையும், எங்களுடைய மக்களையும் அடுத்த கட்டத்துக்கு கொண்டு போவார். அதற்கு இன்று முழுமக்களும் ஒன்றுபட்டு நிற்கின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் சிங்கள தேசம் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து எமது மக்கள் மீது திணித்திருக்கின்ற இராணுவ ஆக்கிரமிப்பு நெருக்குவாரங்கள் அனைத்தையும் நிறுத்தி தமிழர் தேசத்தையும் தமிழ் மக்களையும் நிம்மதியாக வாழ அனுமதித்தால் மட்டுமே சிங்கள தேசமும் ஒரு நிம்மதியான வாழ்வை பெற முடியும். அதை விடுத்து தமிழ் மக்கள் மீது வன்முறையை, ஆக்கிரமிப்பை திணித்து வாழ்வை சிதைக்க முற்படுவார்களேயானால் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு மீண்டெழுந்து ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற நிலைக்கு தள்ளப்படுவார்கள். அந்த நிலையில் சிங்கள தேசமும் சிங்கள மக்களும் ஒரு பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடும். ஆகவே கடந்த காலத்துப் போரினால் சிங்கள மக்கள் எவ்வளவு சிக்கல்களுக்குட்பட்டு, நெருக்கடிகளுக்குட்பட்டு சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை அளித்தார்களோ அந்த நிலையை சிங்கள மக்கள் எடுக்க வேண்டும். சர்வதேச சமூகம் கூட இந் நிலையில் தீர்க்கமான முடிவை எடுக்குமென்று நாங்கள் நம்புகின்றோம். ஏனெனில் சர்வதேச சமூகத்திற்கு நாங்கள் அனைத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றோம் எனத்தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைக்கப்பெற்ற இச்சட்டவாக்கச் செயலகத் திறப்பு விழாவினை ஆரம்பிக்கும் முகமாக நேற்றுக்காலை 10.00 மணியளவில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஏற்றினார்.

தொடர்ந்து தமிழீழ சட்டவாக்கச் செயலகத்தின் பெயர்ப்பலகையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் கா. வே. பாலகுமாரன் திரைநீக்கம் செய்து வைக்க கட்டடத்தினை அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நாடாவை வெட்டித்திறந்து வைக்க, செயலகத்தின் நூலகத்தினை வைத்தியர் பொன் நித்தியானந்தன் திறந்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற அரங்க நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக மங்கல விளக்கினை மாவட்ட நீதியாளர்கள் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பராவின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உரையாற்றியதைத் தொடர்ந்து, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள்,போராளிச் சட்டவாளர்கள், நீதியாளர்கள் மற்றும் யாழ்ப்பாணம்,மன்னார், வவுனியா மாவட்டங்களின் சட்டவாளர்கள், நீதியாளர்கள் அரச அரசசார்பற்ற நிறுவனபிரதிநிதிகள், பணியாளர்கள் தமிழீழ காவல்துறைஉறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பெரும்திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (சதீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.